ஓம் தத்ஸத்.

ஏகமேவாத்விதீயம்.

# தத்துவபோதினி.

பு. ௩.] சென்னைப்பட்டணம் ௧௮௯௯௵ டிஸம்பர்௴ ௧௫௨. [இல. ௮.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம்ஜ்ஞானமனந்தம்ப்ரஹ்ம, ஸாக்ஷிஸ்ஸூர்யசித்தம், தமேதா யத்ருஷ்ட்வா தத்வம் தத்ர ஏவமோநாயம் ப்ரஹ்மவிதார்த்ருதாஷ்டஹவதி, ஸோயே தமேவஞ்ச ஏவாவியதி.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

## விஷய அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| ௧. கட்வுள்துதி | ௧௩௯ |
| ௨. விளம்பரங்கள் | ௧௪௦ |
| தத்துவபோதினி. | |
| ௩. வேதாந்தவிஷயம் | ௧௪௧ |
| ௪. வேளாண்மை | ௧௪௨ |
| ௫. மதநூல் | ௧௪௩ |
| ௬. பிரம்மதருமம் | ௧௪௫ |
| ௭. உபநிஷத்து | ௧௪௬ |
| ௮. பேகன்வியாசம் | ௧௪௬ |
| நிருபங்கள். | |
| ௯. உபந்நியாஸம் | ௧௪௭ |
| ௧௦. பெங்களூர்வேதசமாஜம் | ௧௫௨ |
| ௧௧. குலம் | ௧௫௨ |
| ௧௨. மதுரைதேவஸ்தானம் | ௧௫௩ |
| வர்த்தமானம். | |
| ௧௩. மிஸ்மேரிகார்பெண்டர் | ௧௫௪ |
| ௧௪. ஈவினிங்ஸ்டார்(மாலைதாரகை) | ௧௫௫ |
| ௧௫. இங்கிலீஷ்தத்துவபோதினி | ௧௫௫ |


சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

## கடவுள் துதி.

### ஸ்ரீராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

கருணாநிதே - பிரமாவுனைச் - சரணாகதா - னடைந்தேன்.

அனுபல்லவி.

குருவாகியநீயெனையிடை - விடாமலேகடாக்ஷித்தருள்...(கருணா)

சரணங்கள்.

க. அகாதமான - விகாதமெல்லாந் - தகாதெனவே - விலக்கி.
எளிதாகசகலநிதியும்,
தெரிய-வருளி-பெரிதா-மிருளை-ஹரிப்பாயெனவே..............(கருணா)

உ. புராதனமாம் - தராதலத்து - நிராதரவை - யொழித்து,
பயமேதுமென்மனமுருது,
இணையில்-துணையே-கணமுந்-தணியா-தணைவாயெனவே.........(கருணா)

ந. உதாரமுள - பிதாவேயெ - னதாருயிராக - விருந்து,
விரைவாகவரியவின்பமும்,
அடைய-விடையில்-தடையா-மிடரை-விடுப்பாயெனவே.......(கருணா)

## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..................... க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்........................ க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர்க்குச் சந்தாவீதம் - அ- அணா உயர்த்தப்படும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணா வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ரு - 0
தபால்கூலி............ 0 - ½ - 0

தெலுங்கு பாலவியாகரணம்... 0 - ச - 0
தபால்கூலி............ 0 - க - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் அர்ச்சையைக்குறித்து நன்ருய் பயிண்டுசெய்தது......................... 0 - அ - 0
தபால்கூலி............ 0 - உ - 0

ஷை மட்டபயிண்டுள்ளது..... 0 - எ - 0
தபால்கூலி............ 0 - உ - 0

வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது........ 0 - அ - 0
தபால்கூலி............ 0 - உ - 0

தெலுங்கில் ஸ்தோத்திரபாடம். 0 - க - 0
தபால்கூலி............ 0 - க - 0

கஅசுஙு௵ மேமாசம் முதல் கஅசுசு௵ ஏப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... ரு - 0 - 0
தபால்கூலி........... 0 - ச - 0

வசனக்கலம்பகம்ஒன்றுக்கு... 0 - ச - 0
தபால்கூலி............ 0 - உ - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

## விளம்பரம்.

### தெலுங்கு தத்துவபோதினி.

இஃது சென்றநவம்பர்முதல் பிரசுரஞ்செய்யப்பட்டு வருகின்றது. நவம்பர்முதல்மேமீ வரையில்அரைவருஷசந்தா. 0 - கஉ - 0
தபால்கூலி........ 0 - சு - 0

## தத்துவபோதினி.

சோதரர்களே!

ஆதியில் லிகிதவேதமொன்றுகடவுளால் கொடுக்கப்படலாகுமாயின் அஃது மனிதசாமான்னியருக்கும்பயன்படும்பொருட்டு தனியாகவும், இரண்டன்றி ஒன்றேயாகவு மிருக்கவேண்டுமென்பதை முன்சஞ்சிகையில் ஒருவாறுணர்த்தினேம். அத்தனிவேதத்தின் தன்மையைப்பற்றி இன்றுவிசாரிக்குமுன் அதன்காலத்தையும், இடத்தையும்பற்றி யோசிக்கவேண்டும். என்றால் அஃது எந்தகாலத்தில், எவ்விடத்தில் கொடுக்கப்படவேண்டும், என்பதே. லிகிதவேதத்தின் உத்தேசியத்தைச் சற்றுயோசிக்குங்கால், கடவுள் இவ்வுலகத்தைப் படைக்குங்காலத்தில் இவ்வுலகில் ஜனிக்கும், ஆத்மகோடிகள் உஜ்ஜீவிக்க ஒருவித ஏற்பாட்டை அமைத்து அவ்வேற்பாட்டை யுணர்த்தும்பொருட்டேயென்று எளிதில்விளங்கும். மேலும் மேற்காட்டியபடி இவ்வேற்பாடு ஒன்ருக யிருக்கவேண்டுமேயன்றி வேறல்ல. ஆகையில் இஃது ஆதிகாலந்தொடங்கி எல்லாமனிதருக்கும் விளக்கப்படவேண்டிய தாவசியகமாகின்றது. இல்லையாயின் சிலரை நசிக்கவிட்டு மற்றவர்களை உய்க்கும்படி கடவுள் திருவுளம் பற்றினரென்று கொள்ளவேண்டியதாகின்றது. ஆகையால் இவ்வேதம் சிருஷ்டிதொடக்கத்தில்தானே ஆதிபுருஷனுக்கு ஆதிகாலத்தில்தானே கொடுக்கப்பட்டிருக்கவேண்டுமே. இவ்வாதிபுருஷனுடைய பாஷையெது அப்பாஷை ஆதியிலஅவனுக்கு எவ்வாறுகிடைத்தது, ஆதிபாஷை நாளாவட்டத்தில் ஜனித்ததோ அல்லது ஏககாலத்தில் பூர்ணமாகச்செய்யப்பட்டுக்கடவுளால்அளிக்கப்பட்டதோ என்னும் இப்பலகேள்விகளையும் யோசிப்பதாவசியமாயினும், இவைகள் முக்கியமாய் சரித்திரத்தின் உதவிகொண்டு உண்மையாய் நடந்ததிவ்வகையெனவறியவேண்டியதாயிருப்பதாலும், இங்கு எவ்வகைத்தானவேதம் சாத்தியமானகாரியமென்று மாத்திரமே யோசிக்கநிச்சயித்தமையாலும், பின்புஉண்மையில் நடந்த காரியங்களின் வரலாற்றைப்பற்றி விசாரிக்கக்கருதியிருக்கின்றமையாலும், மேற்குறித்தவினுக்களின் விஷயத்தைப் பற்றி யோசியாமல், பிரகிருதவிஷய தீர்மானத்

தின்பொருட்டு, லிகிதவேதம், ஆதியாகிய ஓர்பாஷையில் கொடுக்கப் பட்டிருக்கவேண்டுமென்றுகொள்ளுவோம். இப்பாஷை லிகிதவேதத்தின் உத்தேசியத்துக்கேற்றதாயிருக்க, என்றும் மாற்றமடையாமல் எல்லோருக்கும் சுலபசாத்தியமாகாவிட்டாலும், பெரும்பாலோருக்கு நிஸ்ஸந்தேகமாய் விளங்கத்தக்கதா யிருக்கவேண்டுமென்றுமாத்திரம்இங்குஎச்சரிக்கவேண்டியதாயிருக்கின்றது. இப்பாஷை மாறுதலடையுமாயின் அம்மாறுதலால் விசேஷசந்தேகம் உண்டாய் ஆதிபொருள் இன்னதென்றுஅறிவதில் பலஅபிப்பிராயபேதம் ஜனிக்கும். அது பெரும்பாலோருக்குப் பொதுவாகாமல் சிலருடைய பாஷையாயின் பாஷாந்தரஞ்செய்கையிலும் அபிப்பிராயபேதம் ஜனிக்கும். ஆகையால், இவ்வேதம் ஒரேபாஷையி லிருப்பதுடன் அப்பாஷை எல்லோருக்கும் பொதுவானதாகவும் எல்லோரும் எளிதில் வேறு சஹாயமின்றி யறியத்தக்கதாகவும், என்றும் விகாரமடையாத தாகவும்இருக்கவேண்டும். இவையெல்லாம்சாத்தியமாயினும் மற்றொருஅசந்தர்ப்பமுமுண்டு. அஃதாவது. இப்படிப்பட்டலிகிதவேத மொன்றுஉண்டானபோதிலும், இஃதுமனிதருடையதுராசையாலும் துரபிமானத்தாலும் அவர்களுடையஇஷ்டப்படி மாற்றப்படலாம். இஃது அதிகசுலபசாத்தியமென்பது நமது அனுபவத்தால் விளங்குகின்றது. ஆகையால் மனிதரெல்லோரும், துராசையும துரபிமானமுமற்றுஎன்றும் சத்தியத்தையே நாடுவோராகவிருக்கவேண்டும். மனிதர்பெரும்பாலும்சத்தியத்தைவிரும்பிஅசத்தியத்தைவெறுக்குந் தன்மையுடையவராயினும், அவர்களைஎப்பொழுதும்சத்தியந்தப்பாமலிருக்க நிர்ப்பந்திக்கவொண்ணாது. இப்படிப்பட்டநிர்ப்பந்தமுண்டாயிருக்குமாயின் நன்மைதீமைபுண்ணியபாவம் என்கிறவியவஸ்தையேமுற்றும் அற்றுப்போகும். வியவஸ்தைசூன்னியமாகி மேற்குறித்தநிர்ப்பந்தமேற்படுமாயின், அப்பொழுதுவேதம் அநாவசியகமாகும். ஏனெனில்மனிதரெல்லோரும்வியவஸ்தையும்பேதமுமின்றி இயற்கையாகவேஉண்மைநாடி யொழுகுவோராயின்அவர்களுக்குவேறு பிரத்தியக்ஷத்தால் உண்மையுணர்த்துவதுஅநாவசியகமாகும். ஆகையால்லிகிதவேதம்சாத்தியமானதன்றுமனிதர் உண்மையில்இயற்கையாகவும்நிங்கலாவாறும்பந்தப்பட்டிருக்கவேண்டும். இந்தநிர்பந்தமேற்படுங்கால்வேதமநாவசியகமாகின்றது. இவ்வாறுபாஷையின்சுபாவமாற்றத்தையும் மயக்கத்தையும் யோசிப்பினும், பஷாந்திரஞ்செய்வதால் விளையும்குற்றங்களை யோசித்தபோதிலும், மனிதருடைய இயற்கையான துராசைதுரபிமானங்களை யோசித்தபோதிலும், லிகிதவேதம் எவ்வளவு பந்தத்தோடு ஏற்பட்டபோதிலும், அதனால்கருதப்பட்டநிஸ்ஸந்தேகசத்தியவிளக்கமானது கைகூடாதென்பதுவிசிதமாகும். லிகிதவேதத்தின்தன்மையைப்பற்றி விசாரிக்குமிடத்தும் இத்துணிவே நிலைபடுமென்பது இனிசெய்யப்படும் சர்ச்சையால்விளங்கும்.

---

## வேளாண்மை.

**கரிமூலம்.** இந்தபூதமானது சுத்தியாகவும் தனியாகவும் சாதாரணமாய்வச்சிரங்களிலிருக்கின்றது. மிகுந்த அழகும் ஆச்சரியகரமுமான இந்தரத்தினமானது பளிங்கனசுத்தகரியேயன்றி வேறல்ல. இதை நெருப்பிலிட்டால்கரியாகிவிடுவதே இதற்குபிரத்தியக்ஷரூபகாரம். இதுநிலக்கரியிலிருப்பதுமன்றி காரீயத்திலும் மற்றும்அநேகபூதங்களிலும் பிராணிகளின் சரீரத்திலுமிருக்கின்றன. ஒருமரத்துண்டைகாற்று விசேஷமாக எட்டாதபடிக்கு நெருப்பிலிட்டு சுடுவோமானல் அதுமுழுமையும் எரிந்து சாம்பலாகாது கரியாகவேயிருக்கும். இதுதான் கார்பன்அல்லது கரிமூலமென்று சொல்லப்படுவது. விளக்கில் ஒருஓட்டைக்காட்டினால் இதில் கருப்பான ஒருபதார்த்தமுண்டாகும். இதுவும் அந்தகரிமூலந்தான். இக்கரிமூலத்தை ஜீவமூலத்தில்சுடுவோமானல் கரிமூலத்திருவம் என்னும் வாயுரூபங்கொண்ட ஒருபதார்த்தமுண்டாகின்றது. இதற்கு வன்னமும்வாசனையுமில்லை. இதில் தீபம் உடனேஅவிந்துபோகும் பிராணிகள் செத்துப்போகும். ஆயினும் இது கந்தமூலாதிகளுக்கு அவசியமாய் வேண்டியது. இதில்லாவிட்டால் பயிர்கள் விளையாது. இந்ததிருவத்தைப்பயி

ர்பூண்டுகள் சூரியன்காங்கையினுல் சாதாரணமான காற்றிலிருந்து பிரித்து உட்கொள்ளும்.

**சுத்தகந்தகம்**. இது மிகவும்பிரயோசனகரமானபூதமாய் அநேகஇடங்களில்காணப்படுகிறது. இது வெளுத்தபசுமையான எளிதிலுடையத்தக்க கனபதார்த்தம். இதற்கு ரசங்கிடையாது. குளிர்ந்திருக்குங்காலத்தில் வாசனையுங்கிடையாது. ஆயினும் இதைச்சுட்டாலும் தேய்த்தாலும் ஒருகந்தமுண்டாகும். ஜலத்தைப்பார்க்கிலும் கொஞ்சங்கனமானது. இலகுவான காங்கையினுல் உருகிப்போகும். காற்றில்லாதஇடத்தில் அதிகமாகக் காய்ச்சப்பட்டால் கொதித்து ஆவியாய்விடும். காற்றிருந்தால் தீபற்றி எரிந்துபோகும்.

**காடிக்காரமூலம்**. மற்ற பூதங்களைப்பார்க்கிலும் மெத்தவினேதமானது. எப்போதும் ஜீவமூலத்தோடு சேர்ந்திருக்கும். இதில் கலந்திருக்கும் ஜீவமூலத்தை எளிதில் நீக்கிவிடலாம். இதுவெள்ளாக்கைப்போன்ற எளிதிலுருகாநின்ற பதார்த்தம். இருட்டில் வெளிச்சமுள்ளபுகையால் மூடப்பட்டதாகத்தோன்றும். இதுகாற்றிலிருக்கிற ஜீவமூலத்தோடுகலந்து சாந்தமாகஎரிவதினுல் அப்புகையுண்டாகும். இதை கையில்கொண்டால் கையிலிருக்கும் காங்கையினுலேயே உருகி கையைச்சுடும், இது வெள்ளைப்பூண்டைப்போன்ற வாசனையையுடையது. ஜலத்திலாவது சாராயத்திலாவது கரைவதில்லை. மெத்தவிஷமுள்ளது. ஆயினும் இது ஜீவமூலத்தோடு கலந்து காடிக்காரத்திருவமென்கிற ஒரு அருமையான பதார்த்தம் ஆகிறது. பிராணிகளுடைய எலும்புகள் இந்ததிரவத்தினுலும் சுண்ணும்பினுலும் ஆகின்றன. நமது எலும்பு தசை நரம்பு முதலியவும் நாம் உண்ணுகிற ஆகாரத்தினுல் குழந்தைப்பருவத்திலிருந்து வளருவதால் நம்முடைய ஆகாரத்தில் மேற்படிபதார்த்தம் விசேஷமாகக்கலந்திருக்கவேண்டும். ஆதலால் நாம் உண்ணுகிற பாலிலும் பலவித தானியங்களிலும் கிழங்குகளிலும் மாம்சாதிகளிலும் இந்தத்திருவம் விசேஷமாகக்கலந்திருக்கின்றது. இது இல்லாமற்போனுல் கந்தமூலங்கள் முளைக்கவேமாட்டா. நிலமானது பாழடைந்து ஒன்றையுமுண்டாக்காது. ஆகையால்தான் நறுக்கப்பட்ட எலும்புகளும் சுடப்பட்டஎலும்புகளும்மிகவும் பிரயோஜனகரமான எருவாகின்றன.

கிளோரயின், பிரோமயின், ஐயோடயின், பிளோரயின், என்னும் இந்தநான்குபூதங்களும் ஒன்றுக்கொன்று மெத்தசம்பந்தப்பட்டனவாகத் தோற்றுகின்றன. இவைகளுள் முதற்சொல்லப்பட்ட கிளோரயின் அல்லது **இலவணமூலம்**, அதிகப்பட்டதாயும் சிறந்ததாயும் இருக்கின்றது. இதுவிசேஷமாக சாதாரணமானஉப்பிலிருந்து எடுக்கப்படுகின்றது. இலவணமூலம் ஸோடியன்என்னும் இலவணகாரமும் சேர்ந்துதான் உப்பு அல்லது இலவணமாகிறது. இந்த இலவணமூலம் மிகுந்த பசுமையான ஆவியாயிருக்கின்றது, அதின கந்தம் மூச்சைஅடைக்கத்தக்கது. இதைகொஞ்சம் முகந்தாலும் இரும்பல் அதிகமாய் உண்டாகும். இதுகாற்றைப்பார்க்கிலும் அதிகபளுவுள்ளது.

---

## மநுநூல்

### மூன்ரும் - அத்தியாயம். †

(உக) பிராம்மவிவாஹம், தைவவிவாஹம், ஆர்ஷவிவாஹம், பிராஜாபத்தியவிவாஹம், ஆசுரவிவாஹம், காந்தர்வவிவாஹம், இராக்ஷஸவிவாஹம் அதிநீசமான பைசாசவிவாஹம், என விவாஹம் எட்டுவகையாம்.

(உஉ.) ஒவ்வொரு ஜாதியின் தர்மத்தையும், அவைகளுக்குரியகுணதோஷங்களையும், புத்திரோற்பத்தியாலுண்டாகும் குணதோஷங்களையும், எல்லாவற்றையும் முறைப்படிக்கேசொல்லுகின்றேன். (எனபிருகுரிஷி மற்றரிஷிகளுக்குரைக்கின்ருர்.)

(உங.) (மேற்கூறியவிவாஹத்தின்முறைப்படிக்கே)முதலாறுவிவாஹமும்விப்பிரனுக்கும், பின்ருன்குக்ஷத்திரியனுக்கும், இராக்ஷஸவிவாகமின்றிமேற்கூறியநான்கே வைசியசூத்திரர்களுக்கும் தர்ம(விவாஹம்) என அறியக்கடவது.

(உச.) விப்பிரனுக்கு முதல் நான்கே (மிக்க) பிரசஸ்தமெனவும், இராக்ஷஸம் ஒன்றேக்ஷத்திரியனுக்கும், ஆசுரம், வைசிய சூத்திரர்களுக்கும், பிரசஸ்த (விவாஹ)மெனபெரியோருரைக்கின்றனர்.

---

† விவாஹத்தின் பிரிவுகளையும் அவைகளின்தன்மையையும்பற்றி இனிசொல்லப்படுகின்றது.

(உரு) இதில் (தர்மசாஸ்திரத்தில்) குறித்த (கடைசிஐந்தில்) மூன்றுதர்மமானதும் இரண்டு அதர்மமானதுமாகவிருக்கின்றன. பைசாசமும், ஆசுரமும், ஒருக்காலும் செய்யத்தகாதவைகளாகின்றன.

(உசா.) முன்கூறியஇராக்ஷஸகாந்தர்வவிவாஹங்கள் வேறேவேறேயாகிலும், மிசிரமாயாகிலும், (பந்துக்களை அடித்துஜயித்துகன்னிகையைபலாத்காரமாக எடுத்துக்கொண்டபோதிலும்) க்ஷத்திரியனுக்கு தர்மவிவாஹமெனக்கூறப்படுகின்றது.

(உஎ.) ‡ வேதம்நன்றாயுணர்ந்து நல்லொழுக்கத்திலிருப்பவனை அழைப்பித்துதான் நன்றாய் பூஜித்து இருவரையும் நல்லவஸ்திரமணியச்செய்து, கன்னிகாதானம்செய்வது பிரம்மவிவாஹம்எனக்கூறப்படுகின்றது.

(உஅ.) விதிப்படிக்கு யக்கியமாரம்பித்து தர்மத்தை நடாத்திவரும் ருத்விக்கின் பொருட்டு, ஆடை யாபரணங்களால் மிக அலங்கரித்த கன்னிகையை தானஞ்செய்வது தைவவிவாஹம் எனக்கூறப்படுகின்றது.

(உகூ.) வரனிடத்தினின்றும் ஒன்று அல்லது இரண்டு இணைபசுக்கள் மிதுனமாகிலும், (சுவல்பமெனநினையாமல்) தர்மார்த்தமாக பெற்றுக்கொண்டுசெய்யும் கன்னிகாதானம் ஆர்ஷவிவாஹம்எனக்கூறப்படுகின்றன.

(ஙய.) வரனைப்பூஜித்தபின்பு "நீங்களிருவருங்கூட தர்மத்தை யனுஷ்டிக்கக்கடவீர்கள்" என்றுவாக்கினால்சொல்லிபின்பு கன்னிகாபிரதானம் செய்வதுபிராஜாபத்தியவிவாஹம்எனக்கூறப்படுன்றது.

(ஙக.) (தகப்பன்முதலிய)ஞாதிகளுக்கும், கன்னிகைக்கும், யதாசக்திதானம் கொடுத்து தன்னிச்சைப்படிக்கு (தனவிக்ரயத்தால்) கன்னிகாதானம்செய்துகொள்வது ஆசுரவிவாஹமென க்கூறப்படுகின்றது.

(ஙஉ.) காமத்தாலும் மிதுன ஸம்மந்தமாயுமிருக்கும் கன்னிகையினுடையவும், வரனுடையவும் பரஸ்பரஇச்சையால்சேரும் புணர்பானது காந்தர்வ விவாஹம் எனக்கூறப்படுகின்றது.

(ஙங) பந்துக்களைக்கொன்று, வெட்டி, (வீடுகளை) இடித்தும், கன்னிகை அழுதுக்கொண்டும், (உதவிக்குபிறரை)ச்கூப்பிட்டுக்கொண்டுமிருக்கையில், பலாத்காரமாய் எடுத்துக்கொண்டு போகுதல் இராக்ஷஸவிவாஹம் எனக்கூறப்படுகின்றது.

(ஙச.) தூங்கிக் கொண் டிருக்கும் பொழுதாகிலும், (மத்தியத்தால்) மதித்திருக்கும்பொழுதாகிலும், பிரக்கியைதப்பி யிருக்கும்பொழுதாகிலும், இரகஸியமாக கன்னிகையைப்புணர்வது, விவாகத்தில் மிகவும்பாபமுள்ளதும் ஏழாவதும் அதமமானதுமாகியபைசாசவிவாஹம்எனக்கூறப்படுகின்றது.

(ஙரு.) திவிஜசிரேஷ்டர்களுக்குஜலத்தினாலேயே விவாஹம்செய்வது விசேஷமென உரைக்கப்படுகின்றது. மற்றவகுப்பினுக்கு அவர்களின் இச்சைப்படிக்கு(ஒருவர்க்கொருவர் இச்சையாலாவது, வாக்கினால் நிபந்தனைசெய்துகொண்டாவது) ஆகின்றது.

(ஙசா.) ஓ! விப்பிரர்களே ? மனுவால் இந்த விவாகங்களுக்கு கூறப்பட்ட ஒவ்வொன்றின் குணங்களையும் பற்றி நான் சொல்வதைஎல்லாம் கேட்பீர்களாக.

(ஙஎ.) பிரம்மவிவாஹம்செய்துகொண்டவனுடைய புத்திரனானவன் நல்லகர்மம் செய்வானாகில், தன்குலத்தில்முன்பத்துபின்பத்து ஆக தன்னுடன் இருபத்து ஒன்றுதலைமுறை பிதிருக்களைபாபத்தினின்றும் விடுதலைசெய்கின்றான்.

(ஙஅ.) தேவவிவாஹத்தால்ஜனித்தகுமாரனானவன் முன்னேழுபின்னேழுதலைமுறையும், ஆர்ஷவிவாஹத்தால்ஜனித்தகுமாரன் பின்மூன்று, முன்மூன்றுதலைமுறையும், பிராஜாபத்தியவிவாஹத்தால் ஜனித்தபுத்திரன், முன்னாறு, பின்னாறு

‡ இனி விவாஹத்தின் முறைகளுரைக்கப்படுகின்றன.

தலைமுறை (பிதிருக்களை) பாபத்தினின்றும் மீளச்செய்கின்றான்.

(கூகூ.) பிராம்மம் முதலிய நான்கு விவாகங்களிலும் பிரம்மவர்ச்சஸ் உள்ளவர்களும், பெரியோர்களுக்கு இசைந்தவர்களுமான குமாரர்கள் ஜனிப்பார்கள்.

(சஎ) (அவர்கள்) நல்லரூபமுள்ளவர்களும், பலமுள்ளவர்களும், குணமுள்ளவர்களும், தனமுள்ளவர்களும், யசஸ் உள்ளவர்களும், நல்லபோகிகளும், தார்மிஷ்டர்களும், அனேககாலம்ஜீவித்திருப்பவர்களுமாக இருப்பார்கள்.

---

## பிரம்மதருமம்.

கூ - வது - அத்தியாயம்.

(க.) (ஏகாக்கிரசித்தமுள்ள) தபஸினல் பிரம்மத்தை (நன்றாய்) அறிந்துகொள்ளக்கடவாய் ; அப்பிரம்மத்தை அறிபவன் பரத்தை (அப்பிரம்மத்தை) அடைகின்றான்.

(உ.) எவனாலும்சிரேஷ்டமாகிய(தஹராகாசத்திலும் புத்தியிலுமிருக்கும் (அப்பிரம்மத்தை) ஸத்தியஸ்வரூபமாயும், கியானஸ்வரூபமாயும், ஆனந்தஸ்வரூபமாயுமிருப்பதாக அறிகின்றானே அவன் (இப்படிக்கு பிரம்மத்தை நன்றாய் அறிந்து) ஸர்வக்கியனான அப்பிரம்மத்துடன் ஸகல சுகங்களையும் அனுபவிக்கின்றான்.

(ங.) எவன்ஸர்வக்கியனும்அனைத்தையுமறிந்தவனுமா யிருக்கிறானே, எவனுடையஇப்பிரஸித்தமானமஹிமைஇவ்வுலகத்திலும் ஸ்வர்க்கலோகத்திலும் பரவியிருக்கின்றதோ அப்படிப்பட்டஅமிருதஸ்வரூபமாயும், ஆனந்தஸ்வரூபமாயும் பிரகாசிக்கானின்ற(பிரம்மத்தை)விவேகிகள் (புத்தியுடையோர்) கியானத்தால் (எங்கும்நிறைந்தரூபமுடையவனாக) பார்க்கின்றார்கள்.

(ச.) எதையானால் (பிரம்மமென) பிரம்மக்கியானிகளறிகின்றனரோ (விக்கியானத்தால் பிரகாசிக்கானின்றமனஸ்ஸின் அப்பியந்தரத்திலிருக்கும்) ஜோதிமயமான கோசத்தில் அதுநிர்மலமாயும் (என்றால்தோஷம், ரஜஸ், மலம், முதலியவற்றினின்றும்விடுபட்டும்) நிரவயவமாயும் சுத்தமாயும், (அதிகஒளியுடைய சூரியன் முதலிய) பிரகாசத்துக்கெல்லாம் பிரகாசமளிக்கத்தகுந்ததாயும் இருக்கின்றது.

(ரு.) அப்பிரம்மத்தினிடத்தில், சூரியன் (ஸகலத்தையும்பிரகாசிப்பிக்கின்றவனாயினும்)தானாய்பிரகாசிக்கிறதில்லை; சந்தரனும், நக்ஷத்திரங்களும்மின்னல்களும், அக்கினியும்பிரகாசிக்கிறதில்லை. அப்பரமபுருஷனுடையஒளியால் இவ்வுலகமெல்லாம் பிரகாசிக்கின்றது. (சுயம்பிரகாசியாகிய) அப்பரமபுருஷனை அனுஸரித்து இவ்வுலகமெல்லாம் விளங்குகின்றது.

(கூ.) எதுவானால் ஸர்வபூதஸ்தமாகவிருக்கிறதோ அதுவேயிருக்கின்றது, (எனப்படுகின்றது) அதைநன்றாய்அறியும்வித்வான், அதிவாதி (அப்பரப்பிரம்மத்தை விட்டுவேறொருவனையும்வாதிப்பவன) ஆகான்(எவனானால்) அப்பரப்பிரம்மத்தினிடத்திலேயேகிரீடையும், ஆஸக்தியுமேகர்மமாகஇருக்கின்றானோ அவன் (ஸகலமான) பிரம்மவித்துக்களுக்கெல்லாம் பிரதானனாகின்றான்.

(எ.) அது (ஸர்வவியாபியாகையால்) மஹத்தாயும், தானாய்பிரகாசிக்கானின்றவும் (ஸகல இந்திரியங்களுக்கும் புலப்படாமையால்) அசிந்தியரூபமாயும், சூக்ஷ்மத்துக்கெல்லாம் அதிசூக்ஷ்மமாயும், பிரகாசிக்கின்றது(பின்னுமது கியானமற்றோர்க்கு புலப்படாமையால் அவர்களுக்கு) வெகுதூரமாயும், (கியானமுடையோருக்கு) அதிசமீபமாயும், இவ்விடத்தில்புத்தியிலேயே இருப்பதாகவுமிருக்கின்றது.

(அ.) (ரூபமின்மையால்ஒருவனாலும் அப்பரமபுருஷன்) கண்ணால் கிரஹிக்கப்படாதவனும் (இப்படிப்பட்டவனென்று சொல்லக்கூடாமையால்) வாக்கினாலுமுச்சரிக்கக்கூடாதவனும்) இதரஇந்திரியங்களுக்குட்படாதவனும் தபஸ்ஸாலும் இதரகர்மத்தாலும் கிரஹிக்கக்கூடாதவனுமாக இருக்கின்றான். (எப்படி கிரஹிக்க

கத்தக்கவனென்றால்) (எவனானால்) பரிசுத்தமான அந்தக்கரணமுள்ள தியானத்தால் எவ்விதமாய்தியானம்செய்யக்கூடுமோ அவன் அப்படிதியானம் பண்ணுவதால் அந்த (பிரம்மத்தை) நிஷ்கலனாய் (என்றால் ஸர்வாவயவ மற்றவனாய்) பார்க்கின்றான்.

௬ - வது அத்தியாயம்

முற்றிற்று.

---

## தைத்திரியோபநிஷத்து.

### ௮ - ம் - அனுவாகம். †

'ஓம்'என்பது(சப்தரூபமான)பிரம்மம்;—இவ்வனைத்தும்'ஓம்'என்னும்(சப்தப்பிரம்மத்தால் வியாப்தமாகியிருக்கின்றன) ;—'ஓம்' என்னுமிது அனுகரணம் (செய்வித்தல்); மற்றும் கேட்கச்செய் என்று கேட்கச்செய்கின்றது ; —(ஸாமகானம்செய்வோர்)'ஓம்' என்று (பின்பு)ஸாமத்தை கானம்செய்கின்றனர் ;—(அத்தியயனம்செய்பவரும் இருக்குகளை) 'ஓம்'என்று(சொல்லிபின்பு)சாஸ்திரங்களை (கானமில்லாருக்குகளை)சொல்லுகின்றனர்;—(யக்கியத்தில்)அத்துவரியுவானவன் 'ஓம்'என்று(பின்பு) பிரதிகரத்தை(ஓரிருக்கை ஹோதாவுக்கு) ச்சொல்லுகின்றான் ;—'ஓம் என்று பிரம்மாவானவன் அறிகின்றான் ;—'ஓம்'என்று (பின்பு) அக்னிஹோத்திரத்தில் ஹோமம் செய்யப்படுகின்றது ;—பிராம்மணன்முதலில்'ஓம்'என்று (பின்புவேதத்தை) ச்சொல்லுகின்றான் ;—(இவ்வாறுஉபாசிப்பவன்) பிரம்மத்தை யடைவான்;—பிரம்மத்தையேயல்லவாஅடைகின்றான்;—

எட்டாம்அனுவாகம் முற்றிற்று.

### ௯ - ம் - அனுவாகம். ‡

ருதத்தை (உள்ளூறஉண்மையே யவலம்பிக்கும்விரதத்தை) தான்கற்றலும்,கற்பித்தலுமேயாம் ஸத்தியத்தை (வாக்கின்நிலைமையான உண்மையைக் காக்கும் விரதத்தை)தான்கற்றலும் கற்பித்தலுமேயாம். தபஸ்ஸை (அனுதாபபட்டல்என்னும் விருதத்தை)தான்கற்றலும், கற்பித்தலுமேயாம் ;—தமத்தை (பாஹ்யேந்திரியங்களின் அடக்கமென்னும்விருதத்தை) தான்கற்பதும். கற்பித்தலுமேயாம் ;—சமத்தை (சாந்தகுணமென்னும்விருதத்தை) தான்கற்றலும், கற்பித்தலுமேயாம்;—அக்னிகளை(யக்கியம் முதலிய விருதத்தை) தான்கற்றலும், கற்பித்தலுமேயாம்;—அக்னிஹோத்திரம் (ஹோமம் முதலியவிருதத்தை) தான்கற்றலும், கற்பித்தலுமேயாம்;—அதிதிகளை(அவர்களை ஆதரிக்கும்விருதத்தை) தான்கற்றலும், கற்பித்தலுமேயாம் ;—மானுஷத்தை (விவாஹாதிவிருதத்தை) தான்கற்றலும், கற்பித்தலுமேயாம்;—பிரஜையை(புத்திரோத்பத்தியை விருத்திசெய்யும் விருதத்தை) தான்கற்றலும்,கற்பித்தலுமேயாம்;—பிரஜனத்தை (பிரஜோத்பாதகமாகியகர்பாதானவிருதத்தை) தான் கற்றலும், கற்பித்தலுமேயாம்; —பிரஜாதியை(பௌத்திர உத்பத்திசெய்ய புத்திரனை யுண்டாக்கும் விருதத்தை) தான்கற்றலும், கற்பித்தலுமேயாம்;—ஸத்தியத்தையே (யனுஷ்டிக்கடவது;)ராதிதாரர் என்பவர் (ரதீதரர்என்னு ரிஷியின்வம்சத்தில் ஜனித்தவர்) ஸத்தியவாக்குள்ளவராயிருந்தனர் ;—தபஸ்ஸையே (யனுஷ்டிக்கக்கடவது ; )பௌரிசிஷ்டியானவர் (புருசிஷ்டியின்குமாரர்) தபோநிஷ்டராகவே (இருந்தனர்);—தான்அத்தியயனம்செய்வதிலும், பிரவசனம்செய்வதிலும் இவ்வாறே என மௌத்கல்யனென நாமம்பெற்றவரும் (முதகலரின்புத்திரர்) உரைத்தனர்; —அஃதேதபஸ். அஃதேதபஸ்.

ஒன்பதாம் அனுவாகம்முற்றிற்று.

---

## பேகன்வியாசம்.

### சத்தியத்தைப்பற்றியது.

பனுளின்வேலையாகத் தோற்றுகிறகடவுளின்சிருஷ்டியில்முதன்மையானது ஐந்திரியதேஜசு,கடையோவெனில் ஞானதேஜசு, அதுமுதலவன் ஓய்வுதொழில் அவனுவிகொண்டுவிளக்குவதேயாம்.முதலில்பிருதிவி அல்

---

† முன்கூறிய அனுவாகங்களில் வியாஹிருதி (மறைபொருளுள்ளசப்தம்) ஆதிபூதம, முதலியவைகளால் பிரம்மத்தின் உபாஸனா மார்க்கம்விவரிக்கப்பட்டன. இவ்வாரனுவாகத்தில் உபாஸனைகளுக்குஅங்கபூதமானஓங்காரம் அசேதனமாயும் சப்ததன்மத்திரமாயுமிருக்கினும் பராபரபிரம்மஸ்வருபநோக்கங்கொண்டு உபாஸிக்கப்படுமாகில், அப்பிரம்மத்தின் பிராப்திக்குச் சாதனமாகின்றது என்று கூறப்படுகின்றது.

‡ விஞானத்தாலேயே ஸ்வாராஜ்ஜிய பிராப்தி (மோக்ஷபிராப்தி) கிடைக்கின்றதென்பதால் சுரௌதஸ்மார்த கர்மங்களுக்கு முற்றும்லோபம்ஜனிக்கின்றமையால் ஸத்கர்மங்களாலும் புருஷார்த்தஸாதகம் ஜனிக்கின்றதென்பது இவ்வனுவாகத்தில் உபன்னியசிக்கப்படுகின்றது.

லதுபிரளயசங்காரத்தின்முகத்துஒளிவீசினன்; இன்னும்அவனன்பரதுமுகத்துஒளிவீசிக்கொண்டிருக்கின்றனன். மற்றபடி இதரமதங்களிலும் தாழ்ந்ததாகியதன்மதத்துக்கணியாகிய கவி(லுக்குரீஷஸ்)ஆனவன் அத்தியுசிதமாயுரைப்பதாவது.“கரைமீதுநின்றுகடல்மீதுமோதப்படும்கப்பலைக்கண்ணுறுவதோர்சந்தோஷம்,கோபுரப்பலகணியினின்று அடியில்நடக்கும்யுத்தமும்,வீரத்தொழிலும் வீக்ஷிப்பதுமோர்சந்தோஷமே.ஆயினும்ஆளவரிதாகியவும், நித்தியபரிசுத்தமும் அமைதியுமுடைய)சத்தியகுன்றின்மேல்நின்று,அடிக்கணவாயில்புலப்படும்பிழை,சஞ்சலம்(மோக)பனி(மோக)புசல் முதலியவற்றைப்பார்ப்பதினாலுண்டாகும் சந்தோஷத்துக்கு மற்றெதுவும் ஒப்பாகாது. ஆயினும் இஃதுபஸ்சாத்தாபத்தோடுசெய்யப்படவேண்டுமேயன்றி, பூரிப்போடாவது ஆணவத்தோடாவதன்று.

வைதிகசம்பந்தமானவும் சாஸ்திரசம்பந்தமானவும் உண்மையைவிட்டு, லௌகிகசம்பந்த மானஉண்மையைப்பற்றி விசாரிக்க, இதை அநுஷ்டானத்துக்குக்கொண்டுவராதவர்களும் (என்றால்விவஹாரங்களில் சத்தியத்தைமதியாதவர்களும்)பரிசுத்தமானவும் யோக்கியமானவும் நடையேமனிதனுடைய தன்மையைச்சிறப்பிப்பதென்றும், பொன்னிலும் வெள்ளியிலும் சேர்க்கப்படுகிறகல்பைப்போல் அந்த லோகத்தை வேலைக்குஏற்றதாகச்செய்யினும், அதன்குணத்தைத்தாழ்த்துவது போல்பொய்யின்கலப்பென்றும், ஒப்புக்கொள்ளுவார்கள். ஏனெனில்இக்கோணலானவும் சுழலானவும்மார்க்கங்கள்,பாதங்களின்றிதன்வயற்றால்இழிவாய் நகருகிறபாம்பின்நடை யொத்ததாம்.பொய்ச்சொல்லியும் மோசஞ்செய்தும் கண்டுபிடிக்கப்படுவதைப்போ லொருவனுக்கு வேறெந்ததுன்மார்க்கத்தாலும் அவ்வளவு அவமானம் உண்டாவதில்லை: ஆகையால்மாட்டேன் என்பவர்,பொய்யென்னும் மொழியேன்இவ்வளவுஅவமானகரமாகவும், வெறுக்கத்தக்கக்குற்றமாகவும் பாவிக்கப்படுகிற தென்று ஹேதுவிசாரஞ்செய்யுங்கால், அழகாய்செப்பியதாவது.செம்மையாகயோசிக்குங்கால்ஒருமனிதன்பொய் சொல்லுகிறான் என்பது, அவன்கடவுளைத்திரஸ்கரித்து மனிதனுக்குஅஞ்சுகிறான்என்பதாகும்! ஏனெனில் பொய்யானது கடவுளைமுகம் நோக்கி, மனிதனுக்குப்பின்னடைகின்றது.“பொய்யினுடையவும்நம்பிக்கைத்தெரோஹத்தினுடையவும்கொடுமையை,அஃதுகடைநாளில்கடவுள் மனிதனைவிசாரித்து சிக்ஷிக்கும்படியேவும் ஹேதுவாமென்றுகூறுவதைவிடவேறுவிதத்தில் விளக்கஎம்மால்முடியாது. கிரஸ்துமீண்டும்வருகையில் மண்மீது நம்பிக்கைக்காணமாட்டாரென்று செப்பியிருக்கின்றது.

---

## நிருபங்கள்.

### உபந்நியாஸம்.

நமதுசமாஜத்தாருக்கோர்நினைப்பூட்டல்.

அன்பர்களே? இன்றுநான் சொல்லக்கருதிய சிலமொழிகள் முக்கியமாய் எங்கள் ஸமாஜத்தாரைப் பற்றியதாகிலும், “நெல்லுக்கிறைத்த நீர்வாய்க்கால்வழியோடிப்புல்லுக்குமங்கேபுசியுமாம்”என்று அவ்வைகூறிய நியாயப்படிக்கு அதுஅயலார்விஷயத்திலும் பயன்படுவதில் யாதொரு ஆக்ஷேபமுமில்லை.இன்றுநான் சொல்லும்விஷயம் சகலசமயங்களையுங்கடந்த பரிசுத்தமானபாரமார்த்தத்தின் துணிவாகிலும், துரபிமானத்தைவிட்டுயோசிக்கும் ஒவ்வொருவர் மனதிற்கும் புலப்படத்தக்கதேயன்றி, நான் ஒருவன்மாத்திரமே யறிந்ததென்று நான்உரைக்கவில்லை. உலகத்தில் ஞாதாக்களுக்கும், அவர்களுடைய மக்கள் மனைவிமார் சிலசமயங்களில் யுக்தாயுக்தங்களை யெச்சரிக்கப்புகுவது, அவர்களுக்குள்பரஸ்பரமுள்ள அன்பைப்பற்றியேயல்லது, தம்மையுயர்த்திப்பிறரைலாகவமாய்க் கிரகிப்பதினாலன்று. பண்டிதசிரேஷ்டர்களி லொருவனாகியபோஜன் அரசாண்டகாலத்தில் அவனுடையதுவாரபாலகர்கள் யாமத்துக்கொருதடவை அவன்கடமைகளைக் கோஷித்து ஜாக்கிரதையாயிருக்கும்படி யெச்சரித்துவந்ததாய்ப் பெரியோர்சொல்லக் கேட்டிருக்கின்றோமல்லவா? கற்றுணர்ந்தவர்களும் காமக்குரோதாதிபாசங்களுக்கும் அவற்றின் விஷயங்களுக்கும் வசப்பட்டு தம்முடையகடமைகளை மறக்கக்கூடுமாகையால் அவர்களுக்கும் அடிக்கடி தர்மஸ்மரணத்தை யுண்டாக்கவேண்டியது அத்தியாவசியகமென்று இந்ததிருஷ்டாந்தத்தால் ஏற்படுமாகில், ஞானசம்பத்தையும் விசேஷமாய்ப் பெறாமல், காமக்கிரோதாதிகளுக்கு அடிமைப்பட்டு பிரகிருதத்திலுள்ள தீயவேற்பாடுகளின் வாசனையூறி வைரமேறியிருக்கும் நம்மவிஷயத்தில் இவ்விதஸ்மாரகம் ஆவசியகமென்பது கைமுதிக நியாயமாகவிருக்கிறது.

இன்றையஉபனியாசத்தின் விஷயத்தைத் தொடங்குமுன், இவ்விடத்தில் தயைசெய்திருக்கும் கனவான்களுடைய க்ஷமையைமிகவினயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். பலவிஷயங்களைக் குறித்து சுவரூபவிசாரம்

செய்து, சீர்தூக்கி தாரதம்மியங்களையேற்படுத்தவேண்டியபொழுது, விதியின்றி அவற்றின்குணதோஷங்களைக் கூறவேண்டியிருக்கும். நம்முடையதேகத்தில் பிரமாதமானரணம் ஒனறுஜனிக்குமாகில் அதையறுத்துப் பரிசோதித்துச் சிகிச்சைசெய்யவேண்டியிருக்கும். அவ்வாறு பரிசோதிப்பது மனதிற்கினிப்பாயிருக்கமாட்டாது. ஆகிலும்நம்முடையதேஹஸவுக்கியத்தில் திருஷ்டியுள்ளவரையில், அது இனிப்பாயிராத ஹேதுவைப்பற்றி அந்தப்பரிசோதனையை யொழிப்பது உசிதமாகுமோ. பஹிரிந்திரியங்கள் விஷயத்திலெப்படியோ. அப்படியே அந்தரிந்திரியங்கள்விஷயத்திலும், தர்மாசாரத்தின் விஷயத்திலும் என்றுகொள்க. நமதுகுணங்களும் நடத்தைகளும் பழுதானவையென்று அயலாருரைப்பதுகேட்க மனமொப்பாது. ஆகிலும் ஆத்மசோதனையாவது, இதராளுடையவதந்தியாவது இல்லாதவரையில்நமதுகுணங்களுடையவும் செய்கைகளுடையவும்தன்மைநமக்குவிளங்கமாட்டாது. அவைவிளங்காதவரையில் தோஷத்தைத்தியஜித்து குணத்தைக்கிரகித்துச்சீரடைவதுஅசாத்தியமாகும். ஆத்மசோதனைக்குக் கொடியவைரியாகிய ஸ்வாபிமானமென்பது நமக்குள் குடிகொண்டிருக்கின்றமையால் அந்தச்சோதனைஅனைவர்க்கும் சாத்தியப்படமாட்டாது. ஆகிலும்பிறர் அன்புகூர்ந்து எச்சரிப்பார்களாகில், அப்படி யெச்சரிப்பவருடைய சுவரூபமெப்படியிருந்தபோதிலும் அதைகவனிக்காது காரியசுவரூபத்திலேயே திருஷ்டிவைக்கும்பக்ஷத்தில், அவர்களுடையசொல்லும் ஆத்மசோதனைக்கு ஹேதுவாகும். ஆத்மசோதனையினால் இஹபர சுகங்களெல்லாம் கைக்கூடிவரும். இந்த ஸமாஜத்தினால் கருதப்பட்ட உத்தேசியங்களெல்லாம்ஸித்திக்கவேண்டுமாகில், இதினுடைய பரிசுத்தமான சுவரூபத்தையும், நம்முடையசரிதையையும் எப்போதும் மனதில்நாட்டி, தீயவழிகளைத்துறந்து நல்வழியிலே செல்லவேண்டியது அத்தியாவசியக மாதலாலும், அவ்வாறுநடப்பதற்கு விஷய விவேசனமின்றி முடியாதாகையாலும், விதியின்றி நமும்டைய ஏற்பாடுகளில் சிலவற்றின்சுவரூபத்தை திருஷ்டாந்தீகரித்துச் சிலமொழிகளைச்சொல்லவேண்டி யிருக்கிறது. அப்படிசெய்வதில் நாங்கள் ஆவசியகத்தினால் உண்மையைஉரைக்கிறோமேயன்றி, தூஷிக்கவேண்டுமென்கிறகருத்துடனல்லவென்று நம்மவரனைவரும்மதித்துஎங்களைக்ஷமிப்பார்களென்று உறுதியாய்நம்புகிறோம். சகலவித விருத்திக்கும் முக்கியமாய் மோக்ஷஸாம்பிராஜ்ய பிராப்திக்கும் இவ்விதஸ்மரணமும் ஆத்மசோதனையும் அத்தியாவசியக மாகையால், கருணாநிதியாகியகடவுள் அதைநம்மமனதில் நிலையுறப்பதிப்பாராக. நான் இன்று எச்சரிக்கக்கருதிய விஷயம்யாதெனில், நம்முடைய சமாஜத்தில் சேர்ந்துவிட்டதினாலாவது, பிரதிக்கியா பத்திரிகையில் கையொப்பஞ் செய்துவிட்டதினாலாவது, நாம் பஜனைசெய்யுங் காலங்களில்வந்து பாட்டுகளைக்கேட்பதினாலாவது, நம்முடை உத்தேசியங்கள் நிறைவேறமாட்டாது. "நலமேநலமாம், அதற்குக்குறியில்லை; தீமையுமாங்கே" என்று ஷேக்ஸ்பியர் உரைததவாக்கியத்தையும், அதின்கருத்தையும், மனதில்நாட்டி நடக்கவேண்டும். அதின் கருத்தென்னவெனில் உலகத்தில் இன்னின்னகுறியுடைய இன்னின்னவகுப்பார் நல்லவர்களெனக் கூறவொண்ணாது; நல்லோராகக்கண்டறிய அவரவருடைய நற்குண நற்செயல்சள் குறியாயாகுமேயன்றி, வேஷபாஷைகள் குறியாகமாட்டாது என்பதேயாம். விபூதிருத்திராக்ஷங்களை யபரிமிதமாய்த்தரித்து ஜடையும் காஷாயமும்பூண்டவரெல்லாம் நல்லவர்களென சைவரும்; பன்னிருநாமமும், அக்ஷமாலையுந் தரித்து, த்தமிழ் பிரபந்தங்களைப் பொருள்தெரியாமலுரைப்பவரும் பாகவதர்களென்று வைஷ்ணவரும்; கோபீசந்தனந்தரித்து வாயுஸ்துதி செய்பவர்கள்மாத்திரமே யோக்கியர்களென்று மாத்துவர்களும் கொள்வதுபோலவே, நம்முடைய பிரதிக்கியைகளில் கையொப்பமிட்டு, ஸமாஜங்களுக்கு வருவோரே பக்தரென்றும், யோக்கியரென்றும், பாகவதரென்றும்நாம்கொள்வோமாகில், விஷயவிசாரமின்றி தொன்றுதொட்டு வந்தபழக்கத்துக்கடிமையாயிருப்பவருக்கும், நல்வழியைக்கூறி யனுஷ்டிப்வரெனகிற பிரதிஷ்டையை வகிததுக்கொண்ட நம்மவருக்கும்பேதமேயில்லாமற்போகிறதல்லவா. விஷ்ணுவுக்கு ஆரோபிக்கப்பட்டிருக்கிற சங்கசக்கிராதிகளால் சூடுண்டு, ஸ்ரீபாததீர்த்தாதிகளை யுட்கொண்டு, சரணாகதியென்னும் ராதாரிச்சீட்டைப் பெற்றுக்கொண்டால் மோக்ஷம் கைகண்டபலனென்று கூறுவோரை மோசக்காரரென்றுகோபிப்பதுமன்றி, அப்பேச்சுகளை நம்பி ஏமாந்து பெற்ற பொருளெல்லாம் தொலைத்து அந்த சாமக்கிரிகைகளைச் சம்பாதிப்பவரைக்கண்டு பச்சாததாபப்படும் நாமே, காரிய சுவரூபங்களை மறந்து, நம்முடையப் பிரதிக்கியைகளில் கையொப்பமிட்டமாத்திரத்தில்நமக்கு மோக்ஷம் கிடைக்குமெனக்கொண்டு பிரவசனம்செய்வோமாகில் நம்மைப்போல் மோசம்செய்வோரில்லையென்றுசிலரும், மோசம்போவோரில்லையென்று

சிலரும் நம்மையிகழமாட்டார்களா. "யேகண்டலக்நதுளஸீநளிநாக்ஷமாலா யேபாஹுமூலபரிசிஹ்நிதஶங்கசக்ரா: யேவாலலாடபலகேலஸதூர்த்வபுண்ட்ரா தேவைஷ்ணவா புவநமாஶுபவித்ரயந்தி" (கழுத்தில் துளசிமணியும் தாம்பிரமணியும்பூண்டு, தோள்களில் சங்கசக்கிரங்களால் சூடுண்டு, நெற்றியில்பிரகாசமாக நாமத்தைத்தரித்து இருப்பவர்யாரோ அப்படிப்பட்ட வைஷ்ணவர்களே இவ்வுலகத்தை நொடியில் பரிசுத்தமாக்குகின்றனர்.) என்றும்; "விஷ்ணுதர்ஶநமாத்ரேண ஶிவத்ரோஹ: ப்ரஜாயதே, ஶிவத்ரோஹாந்ந ஸந்தேஹோ நரகம்யாதிதாருணம் தஸ்மாத்விஷ்ணுநாமாபி நவக்தவ்யம்கதாசந." (விஷ்ணுவைக்கண்டமாத்திரத்தில் சிவத்திரோகமுண்டாகிறது, சிவத்துரோகத்தால் கடினமான நரகம்கிடைக்கும், ஆகையால் ஒருககாலும் விஷ்ணுநாமத்தைக்கூட உச்சரிக்கக்கூடாதென்றும்) "கிமத்ர பஹுநோக்தேந ப்ராஹ்மணாயேப்யவைஷ்ணவா: நஸ்ப்ரஷ்டவ்யா நவக்தவ்யா நத்ரஷ்டவ்யா:கதாசந" (விரித்துரைப்பதில் பயனென்ன வைஷ்ணவராயிராதவர் பிராம்மணராகிலும், அவர்களைத்தொடவுங்கூடாது, அவர்களுடன் சேரவுங்கூடாது, அவர்கள்முகத்தில் விழிக்கவுங்கூடாது என்றும்); "ஸர்வகாமப்ரதம்பில்வம் தாரித்ர்யஸ்ய ப்ரணாஶநம் பில்வாத்பரதரம்நாஸ்தி யேநதுஷ்யதிஶங்கர:" (எதினால் சங்கரன் சந்தோஷமடைகின்றானோ அப்படிப்பட்ட பில்வம், நம்முடையவிருப்பங்களனைத்தையுந்தரும் வறுமையைக்கொல்லும், அதைக்காட்டிலும்சிறந்தபொருள்வேறொன்றுமில்லை யென்றும்; "ராமாநுஜார்ய வாதிஹம்ஸாம்புவாஹாய ஶிஷ்யா ஜநாஹ்யாத்மபக்திஹீநா யதீந்த்ராப்ரியாஸ்யு:, யதீந்த்ராப்ரியாவிஷ்ணுகாருண்யதூரா: குதோமுக்திவார்த்தா ஹிதாஸ்வாதியாநாம்" (வாதிஹம்ஸாம்புதாசாரியரை குருவாகவுடைய) (வேதாந்தாசாரியரிடத்தல்) பக்தியில்லாத ஜனங்கள் யதீந்திரராகிய (ராமானுஜாசாரியருக்கு) விரோதிகளாவார்கள். அந்தராமானுஜாசாரியருடைய விசுவாஸத்தைப் பெறுதவர், விஷ்ணுவின்கருணைக்கு வெகுதூரமானவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மோக்ஷமென்கிறவார்த்தைதானேது) என்றும்; "மத்பக்த: ஶங்கரத்வேஷீ மத்த்வேஷீ ஶங்கரப்ரிய:" (என்னுடையபக்தன் சிவனுக்குத்வேஷி. என்னுடைய த்வேஷி சிவனுக்கன்புள்ளவன்) என்றும் இன்னுமிவ்வாறே பற்பலசுவரூப ஹானியான கொள்கைகளைக்கொண்டு நடப்பவரைப்போலவேநாமும், நெற்றியிலின்ன சின்னமுடையவரெல்லாந் துஷ்டரென்றும், லலாடசூனியமாயிருப்பவரே யோக்கியரென்றும், இன்னுமிவ்வாறான அபிப்பிராயங்களையுங்கொண்டு நடப்போமாகில் நமக்குச்சிறப்பொன்றுமில்லையே. இத்தேசத்திற் பிறந்தாலும். அன்னியதேசத்திலுதித்தாலும், நமது மதத்திலிருந்தாலும் வேறுமதத்திற்புகுந்தாலும், வர்ணாசிரம தர்மங்களைவகித்தாலும் ஒழித்தாலும், நெற்றியிற்சித்திரம்வைத்தாலும் துடைத்தாலும், உடலைச்சூடினாலும், வேஷ்டியுடுத்தாலும்தைத்துடுத்தாலும்ஒருலாபமுமில்லைநஷ்டமுமில்லை. புலையுங்கொலையுங்களவுந்தவிர்ந்து, உண்மையுங்கருணையும் நீதியும்வஹித்து பாபத்திற்கஞ்சி, துவேஷத்தைக்கொன்று, அன்புபயிரிட்டு இன்பமடைவோமெனில் அப்போதுதான்நமக்குஉண்மையானபெரும்பிரதிஷ்டையும் இஹபரசுகங்களும்சித்திக்கும். நம்முடையஉத்தேசியங்களையும்உபாயங்களையும் அறிந்துநடக்காவிடில், நாம் ஒருக்காலும் அர்ச்சையை யொழித்தவராகமாட்டோம். விக்கிரகபூஜையை யொழிந்ததினால் அர்ச்சையை யொழித்ததாய்க் கொள்ளக்கூடாது. நம்முடைய பிரதிக்கியைகளில்கையொப்ப மிடாதவர்களுக்கு மோக்ஷமில்லையென்றுவது, கையொப்பம்செய்தமாத்திரத்தில் மோக்ஷம்கிடைக்குமென்றுவது, பிரமிக்கவேண்டாம். நமக்குரியகடமைகளைச் செலுத்தினாலன்றி மோக்ஷம் கிடைக்கமாட்டாது. நம்முடையகடமைகளோ இருவகையனவாம். முதலாவது மனுஷியசாமானியத்தாருக்கும் பொதுவாயுள்ளகடமைகள் ஒருவகையனவாம். இரண்டாவது இந்தசமாஜத்தில் சேர்ந்ததினால்நம்மீது சுமந்திருப்பன மற்றொருவகையனவாம். சமாஜப்பிரயுக்தமாய் வந்தகடமையைக்குறித்து இன்றுபிரஸ்தாபித்துவிட்டு, மற்றொன்றைக்குறித்து இன்னொருதினத்தில் விசாரிக்க நிச்சயித்திருக்கிறேன்.

இத்தேசத்தில்நமக்குச் சோதரராய்உதித்த வர்களிடத்திலெல்லாம் தர்மாதர்மஞானத்தைப்பிரவசனம் செய்வதேசமாஜப்பிரயுக்தமாய் வந்தகடமையாகும். இதற்காகபலவிதமதக்கிராந்தங்களையும்சமயகிராந்தங்களை

யும்படித்து, பலவகுப்பாருடைய ஆசாரவியவகாரங்களைக்கவனித்து, சீர்தூக்கி, யுக்தாயுக்த விசாரம் செய்வது மாத்திரமேயன்றி இவ்விதப் பிரயத்தனங்களால் நாமடைந்த பயனை இதராளிடத்தில் பிரவசனம் செய்வதற்குரித்தானசாமக்கிரிகளையும் சம்பாதிக்க வேண்டும்.

இவ்வாறு பிரவசனம் செய்யுங்கால் நாம் முக்கியமாய்மனதில் நாட்டிநடக்கவேண்டிய விஷயமொன்றுண்டு. சன்மார்க்கத்தால் சன்மார்க்கஸ்தாபனம் செய்யவேண்டுமேயன்றி எந்த ஹேதுவைப்பற்றியாவது துர்மார்க்கத்தை யவலம்பிக்கக்கூடாதென்பதேயாம். வேறுவிதமாய்நடப்பதும்சம்பாவியமோவெனில், அதுஇயற்கைக்குப் பொருந்தாவிடினும் சஹவாஸத்தினால் தீயவழியும் நல்லவழியாய்விளங்குமென்பது லோகப்பிரஸித்தம். நம்மவரில் தென்கலை வடகலை சண்டை நேரிடும்போது சித்தாந்தஸ்தாபனநிமித்தம் எத்தனை பொய்சத்தியங்களும் எத்தனைபொய்தஸ்தவேஜுகளும் செய்யப்படுகின்றன. வேதஸமாஜகண்டனமென்று கும்பகோணத்துப்பண்டிதர்களெழுதியபுஸ்தகத்தில் எத்தனை பொய்களெழுதபபட்டிருக் கின்றன. பூர்வத்தில் நம்முடையசுவந்தராஜியம் நிலைத்திருந்தகாலத்தில், தத்தமதுமதத்தில் பிரவேசிக்கமாட்டோ மென்றவரை அந்தந்தமதாசாரியர் ராஜஸஹாயத்தால் கற்காணங்களில்வைத்தாட்டிக் கொன்றபிராணிகள் எத்தனையாயிரமுண்டு. இம்மாதிரியான வழக்கங்களை நோக்கியும், மதாவேசமென்கிறபிசாசின் ஏவலினாலும் நாம் ஒருக்காலும் அவ்விததுர்மார்க்கங்களை யவலம்பிக்கக்கூடாது. ஸன்மார்க்காவலம்பனத்தால் சன்மார்க்கத்தை ஸ்தாபிக்கமுயல்வது மாத்திரமே நம்முடைய கடமையாகும். அப்படிசெய்வதினால் பலபிராப்தி யுண்டாகவில்லையே யென்றாலோ, அதைக்குறித்து நாம்சிந்திக்கவேண்டியதில்லை - பயனளிக்கவேண்டிய பொறுப்பு கடவுளதாம். பிரயத்தனம்மாத்திரம் நாம் செய்ய வேண்டியது. நாம் செய்யும்உபநியாசங்களைக்கேட்பவர், மிருகமுமல்லர், கல்லுமல்லர், விக்கிரகங்களுமல்லர். நம்மைப்போலவே மனம், புத்தி, ஹிருதயம் முதலியஅவயவங்களோடுபிறந்து, நம்மைப்போலவேஜீவித்துக்கொண்டு நம்மைப்போலவே இஹபரசுகங்களைக்கோரிக்கொண்டு மிருக்கின்றனர். பிரகிருதத்தில்ஒருவேளையவர்கள்அனாதிபழக்கத்தாலும், சுவாபிமானத்தாலும், நம்முடைய சொற்களையாமோதுக்காவிடினும், பலமுறை கேட்குந்தோறும், அவர்களையும் அறியாமல் அவர்களுடையபுத்திவிசாரம் செய்யத்தொடங்கி, சித்தாந்தம் செய்துகொள்ளுமென்பதில்சந்தேகமில்லை. அந்தப் புத்தியானது சரியானசித்தாந்தம் செய்துகொள்வதற்காவசியகமான சாதனங்களை மாத்திரம்கொடுக்க வேண்டியது நமதுகடமையாகும். அது சோர்வின்றிசமயம் நேரிடும்போதெல்லாம் பக்தியோடும் சிரத்தையோடும் உபநியாசம் செய்துவருவதினாலே சித்திக்கும். நமதுசமாஜம் ஏற்பட்டகாலத்தில் அதைப்பரிஹஸித்தவர்களில் பின்பு அதில் சேர்ந்தவர்கள் எத்தனைபேருளர். சேரக் கோருவோர் எத்தனைபேருளர். நம்முடையகொள்கையில்பூர்ணபக்தியும் விசுவாசமுமிருந்தபோதிலும் பெற்றோர்பிறந்தோர் நிர்ப்பந்தங்களுக்குப்பயந்து வெளிப்படாதவர்எத்தனைபேருளர். ஆகையால்நம்முடைய முயற்சிவீணாய்ப்போவதாய் மலைக்க வேண்டாம். கரம்பைத்திருத்திக்கொத்தி உழுது கேழ்வரகு விதைததாலும், பலனடைய மூன்றுமாதம் செல்லுகிறதல்லவா. அனாதியாய்க்கரம்புகொண்டு கல்லாகிவிட்டிருக்கிற நம்முடையமதத்தில், நீரோடிபாய்வதற்குத்தடையாகதுராசார மென்கிற பெரியவரப்புகள்சூழ்ந்தும், அத்தன்மையானதுராசாரத்தால் வயிறுவளர்க்க வேண்டிய வேர்ப்புழுக்கள் பரவியுமிருக்கையில், மிகச்சிறந்த பலவிருக்ஷங்களைவைத்து, பக்தியால் நீரிறைத்து, சிரத்தையால் காவல்காத்து, நித்தியமான இஹபரசுகங்களையடையமுயலும் நாம் இரண்டுதினத்தில் பழுக்கவில்லையேமூன்று தினத்தில்பழுக்கவில்லையே யென்று ஏக்கமுற்று அதைரியமடைவது நம்முடைய சுவரூபத்துக்கடுக்குமா? பலனுடையகவுரவதுக்கு அனுகுணமானகாலம் செல்லுமென்றுநம்பி பொறுமையாய் முயற்சிசெய்யவேண்டியதே நம்முடையகடமையாகும். இந்த முயற்சிக்கு இருவகைப்பயன்களுண்டு. துரபிமானமுள்ளவரைத் தெளியச்செய்வதொன்றும், தெளிந்திருக்கும்சிறுவர்களுக்குச்சுவாதந்திரியம்வருவதற்குள்அவர்கள்சஹவாசதோஷத்தால் மறுபடி துரபிமானத்துக்காளாகாமலிருக்கச்செய்வது மற்றொன்றுமாம். வெகுநாள்பழக்கத்தின்வாசனை யூறியிருப்பவரைத்திருப்புவதுகடினமாகையால், அவர்களில் தெளிவோர்வெகு சுவல்பமாகவேயிருப்பார். மற்றொருவகுப்பாருக்குப்பூரணமானசிரத்தை யிருந்தபோதிலும், அவருக்கு சுவாதந்திரியம் வருகிறவரையில், அவர்களில் விசேஷமாய்நம்மைக்கூடத்துணியமாட்டார்கள். பருவத்துக்கு முன்னுண்டாகும் வம்புக்காய்களைப்போலவே பிரகிருதத்தில் நம்மைக்கூடுவோர் வெகுகுறைவாயிருப்பா

ர். ஆகிலும் நாம்சோர்வின்றிகொத்திநீரிறைத்துவந்தால் பருவம் வந்தவுடனே வருஷந்தோறும் அபாரமானபலனனுபவிக்கலாமென்பதுசித்தம். இவ்வாறுமுயல்வதில் அநாவசியகமாய் அயலாருக்கு மனவருத்தம்விளைப்பதைநாம் வெகுஜாக்கிரதையாய்த் தடுக்கவேண்டும். ஆகிலும்ஹேதுவின்றியேஅயலார்க்குமனஸ்தாப முண்டானாலும், அப்படியுண்டாவதுஅனிவாரியமானாலும், அப்போது அதற்கஞ்சிபின்னிடையவுங்கூடாது. நம்முடையசிந்தையைமாத்திரம் பரிசுத்தமான நிலைமையில் காக்கவேண்டும். இவ்வாறுசன்மார்க்கப்பிரவசனம் செய்யவேண்டிய கடமைநம்மைமாத்திரம்பொறுத்ததென்றுவது இதாருக்குக்கிடையாதென்றுவதுநானுரைக்கவில்லை. 'ருதஞ்ச ஸ்வாத்யாயப்ரவசநே ச, ஸத்யஞ்ச ஸ்வாத்யாயப்ரவசநே ச, தமஶ்ச ஸ்வாத்யாயப்ரவசநே ச, ஶமஶ்ச ஸ்வாத்யாயப்ரவசநே ச' (நியாயத்தை அப்பியசித்துப்பிரவசனம்செய்க, பொறுமையை அப்பியசித்துப் பிரவசனம் செய்க, சாந்தகுணத்தை அப்பியசித்துப்பிரவசனம் செய்க) என்பதுமுதலியஉபதேசங்களைவிதித்ததில், சகலருக்கும்ஸார்வத்திரிகமாகஸ்வானுஷ்டானத்தை யெவ்வளவு கட்டாயமாய் வேதம்விதித்ததோ அவ்வளவுகட்டாயமாகவே 'பிரவசனத்தையும் விதித்தது. ஆகிலும்சுவாத்தியாயம் அனைவர்க்கும் எப்படி சாத்தியமாகுமோ, அப்படியே பிரவசனமும்சாத்தியமாகமாட்டாது. அவரவர்சக்திக்கியைந்தவாறுதர்மங்களின்ஸ்தூலசூக்ஷமங்களையறிந்துகொண்டு அனுஷ்டிக்கவேண்டியது மனுஷியசாமானியத்துக்குமீங்கலாக்கடமையாகிலும், அதைப்பிறர்மனதிற் பொருந்தும்படிசொல்லி யாசரிப்பிக்க அனைவராலும் முடியாது. அதற்குரித்தானசக்தி சாமர்த்தியாதிசாமக்கிரிகளைப்பெற்றவர்களால்மாத்திரமே. அதுமுடியும், பிரகிருதத்தில் நம்முடையஸமாஜத்தில் சேர்ந்திருப்பவர்களில் இவ்வித அமைப்பைப் பெற்றவர்களும், சுவல்பசிரமத்தால்பெறத்தக்கவர்களும் சக்திவஞ்சனையின்றி இவ்விருவகைக்கட்டளையும் முடிக்கமுயலவேண்டும். ஆகிலும் இவ்விரண்டையும் முடிக்கசக்தியில்லாதவர்கள் இந்தசமாஜத்தில் சேரக்கூடாதென்பது என்கருத்தன்று. இந்தநல்வழியானது கடவுளின்கடாக்ஷவீக்ஷணியத்தால் வேரூன்றிநிலைக்கும்வரையில், இருவகைக்காரியங்களையும் முடிக்கவல்லவரோயிதில் சேருவதுஉத்தமபக்ஷமாகும். உபதேசிக்கவசக்தராயிருந்தாலும் தர்மநிலையினின்றும் நழுவாதுநிற்பவர்கள் சேருவதிலும் பயனுண்டு. தங்கள் வரையிலும்கூட தர்மசுவரூபத்தை யறிந்துகொண்டுஅனுஷ்டிக்கமாட்டாதஜனங்கள் உலகத்திலிருப்பார்களென்றுநான்நினைக்கவில்லை. அப்படியாரோனுமிருப்பார்களெனில், அவர் எந்தமதத்திலிருந்தும்பயனில்லையாகையால், நம்முடையஸமாஜத்தில்அவர்களுடையவரவைப்பிரார்த்திக்கவேண்டியதில்லை.

இதுவரை நம்முடையசமாஜத்தின் நன்மையின்பொருட்டுநாம் செய்யவேண்டியமுயற்சியைக்குறித்து சங்கிரகமாய்ச் சிலமொழிகளையுரைததேன். இனிநம்மால் அதற்குஉபகாரம் செய்யக்கூடாமற் போனபோதிலும், அபகாரமாவது செய்யாதிருக்க முயலவேண்டுமென்பதைக்குறித்துச் சிறிதுபிரஸ்தாபிக்கிறேன். எந்தமதத்திலும் ஜனங்கள் விஸ்தாரமாய் சேர்ந்தபிறகு பலரில்லாவிடிலும் சிலராகிலும்துஷ்டராயும் துர்மார்க்கர்களாயுமிருப்பது சாத்தியமே சம்பாவியமே. ஆதியில் ஹிதர்கள் சுவல்பமாயும் துவேஷிகள் விசேஷமாயுள்ள காலத்தில், அதில்சேர்ந்தவர்களொவ்வொருவரும், அவரவர்சக்திக்கியைந்தவனை வஞ்சனையின்றி சர்வவிதத்திலும் பரிசுத்தாத்மாக்களாகவிருக்கமுயலவேண்டும். இல்லாவிடில்அந்தமதமே பிறருடைய நிந்தைக்குப்பாத்திரமாயும், அதிஹேயமாயும்விளங்குமாகையால்அதுமுளையிலேயேயழிந்துபோகும். அன்றியும்அம்மாதிரியானகாரியங்களைப்பிற்காலத்தில்யாரோனும் தொடங்கினாலும், அதில்யாருக்கும் நம்பிக்கைஜனிக்கமாட்டாது. ஆகையால்சர்வப்பிரயத்தனத்தாலும் நம்முடையஸமாஜத்தின்விருத்தியைத்தேடகடமைப்பட்டநாம் அவ்வாறுபரிசுத்தராகவேண்டும். நன்மைபுரிதலொன்றுமாத்திரம்நமக்குத்தொழிலாகுமேயன்றி, தீமைசெய்யஅதிகாரமில்லையென்பதை மனதிற்கொண்டு, உறுதியாய்நாம்பிடக்கயல்வோமாகில் நேற்றுஅஸாத்தியமாய்த்தோன்றியது இன்றுதுஸ்ஸாத்தியமாய்த்தோன்றும்நாளை ஸுஸாத்தியமாயும் விளங்கும். கடையாகஅவர்கள்நம் மைப்பகைப்பதினால்கடவுளினுடைய மதத்தின்பிரவசனத்துக்குத்தடையுண்டாகுமேயன்றிவேறொன்றுமில்லையே. அதினால்அவர்கள்கடவுள்விஷயத்தில்அபராதிகளாவார்களேயன்றிநமதுவிஷயத்திலல்லவே. தன்விஷயத்தில்பட்டஅபராதத்தையோசித்துக்கூலி கொடுக்கக்கடவுளிருக்கையில் அவருக்குரித்தானஅதிகாரத்தைநாம்ஆக்கிரமிப்பதுஅநாவசியகமும் அனுசிதமுமாகும். முடிவில் கடவுளின் அனுக்கிரகத்தைப்பெறுவோமாகில், இவர்களுடைய அவேஷம்அந்த அனுக்கிரகபலத்தையும்நிஷ்பலமாக்குமோ? ஆகையால் அவர்களை துவே

ஷித்துகாலத்தையும் ஒழித்து, சுவரூபத்தையும் கெடுத்துக்கொள்வதைக்காட்டிலும், நாமெடுத்தகாரியம்கைக்கூடிவரவேண்டுமென ஆந்தரியமான பக்தியுடன் அவரைத்தொழுதேற்றிப்பிரார்த்திப்போமெனில் சகலவிதஅரும்பயன்களும் கைக்கூடிவரும்.

## பெங்களூர்வேதசமாஜம்.

ஓம்பிரம்மணேநமஃ.

மன்னுலகேற்றும்சென்னபட்டணத்தில்.
வேதசமாஜமாம்நீதவான்களின்,
மெய்யேவெல்லும்பொய்யல்லவெனும்,
தத்துவபோதினிக்கர்த்தரவர்கட்கு,
சிநேகவந்தனம்அநேகதந்தனம்.

ஐயா.

பெங்களூர்வேதசமாஜபஜனைசபை.

முன்கடிதத்தில்(தத்துவதர்சன்)என்பவர் தெரிவித்திருக்கிறபடியேஇதுநாளது மீ௧௧ ஆதிவாரம்மாலை௬-மணிக்குச்சேர்ந்தது.

௧-வது. மேற்படிசபை காரியதரிசியவர்கள் (பரப்பிரும்மஸ்தோத்திரத்தில்) முதல் ஸ்தோத்திரம்வாசித்தார். அதைக்கேட்ட சபையாரும் அதேபிரகாரம் அவரவர்மனதிலதியானஞ்செய்தார்கள்.

௨-வது. அந்தசபையைச்சார்ந்தவர்களில், வே. குமாரசாமிமுதலியாரும், ஆ. வீராப்பெருமாமுதலியாரும், தத்துவபோதினியிலிருக்கும் பஜனைகீர்த்தனைகளையும் சிங்கப்பூர் திபதைகண்ணிகளையும் கேட்போருவக்கும்படி பாடினார்கள்.

௩-வது. ஆ, ஐயாசாமிமுதலியாரவர்கள் ௨-வது புத்தகம் தத்துவபோதினியிலிருக்கும் பிரம்மகுணவினாவிடையும், ௩-வதுபுத்தகம் தத்துவபோதனியில் சகலவித்தைகளிலும் சர்வோத்கிருஷ்டமானது வேதமேஎன்பதையும் வாசித்து அவைகளின்கருத்தையும் விளங்கும்படி சொன்னார்.

௪-வது. அச்சபையில்வந்திருந்தவர்களில் ஒருவர் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்பவைகளின்வழியென்னவென்று வினாவியதற்கு ஆ.நாகலிங்கமுதலியாரவர்கள் ‘மன்னுயிரைம்தன்னுயிர்போலெண்ணுவதே சரியை மனுநீதி குருமொழிதப்பா நிலையே கிரியை, என்றுமேயலையுமனமொடுங்குவதே யோகம, எப்பொருளுந்தற்பரமாய்நின்றது வேஞானம்” என்று கண்ணுடையவள்ளலார் திருவாய்மலர்ந்திருக்கிறொன்றும் இவ்வகை கருத்துகளையுணராதவர்கள் சரியைகிரியைகளை விக்கிரகங்களென்கிற பொம்மைகள் விஷயத்தில் சொல்லுகிறார்களென்றும் விடையுரைத்தார்.

௫-வது. வே. கிருஷ்ணசாமிமுதலியாரவர்கள் வேதசமாஜமுதல் விண்ணப்பத்தில் ௨௪௬ - ம்பக்கமுதல் ௨௪௯-ம்பக்கம்வரையிலுள்ள நமது முன்னோர்கள்ஸ்திதியும் தத்காலஸ்திதியும் வாசித்து அதன்முக்கியகருத்துகளையுஞ்சொன்னார்.

௬-வது. ஒருவர் நமது புராணங்களிற் சொல்லியிருக்கும் பண்டிகைகளிற் சிலதை அனுசரிக்கலாமே என்று வினாவியதற்கு, செ. அருணாசலமுதலியாரவர்கள் நமக்கு வேதசாஸ்திரங்களின்கருத்தை தெரிவிக்காமல் கபடபிராமணர் மறைந்திருத்தவரையில் மேற்சொல்லிய சிலபண்டிகைகளை அனுசரித்தாலும் தெரிந்தபின்பு அனுசரிப்பது யுக்தமல்லவேயென்று விடையுரைத்தார்.

௭-வது. ஆ. ஐயாசாமிமுதலியாரவர்களியற்றிய பரப்பிரம்மபஞ்சரத்தினத்தை ஒருவர்வாசித்தார்.

௮-வது. காரியதரிசியானவர் சமாஜவந்தனம்வாசித்தார். இதுமுதலானவைகளைக்கேட்டுக்கொண்டிருந்த சபையரர்யாவரும் சந்தோஷமாய் இராத்திரி (௯) மணியானபடியால் அவரவர்விட்டுக்கேகினர். இனியும் இந்தசபை பரபிரும்மத்தின் கிருபையாலும் தங்களுடைய முயற்சியினாலும நாளுக்குநாள விருத்தி யடையுமென்று நம்புகிறேன்.

| | |
|---|---|
| ௧௮௬௬ (ஹ) நவம்பர் மீ ௨௬உ. பெங்களூர். | இங்ஙனம், த. மதுரமுத்துபிள்ளை பெ-வே-ச.காரியதரிசி. |

## குலம்.

ம-ா-ா-ஸ்ரீ. சென்னைநகர் வேதசமாஜத்தின் தத்துவபோதினிக்கர்த்தரவர்கட்கு, விண்ணப்பம்.

ஐயா. தங்களுடைய உலகோபகாரமாகிய சன்மார்க்கபத்திரிகையில் அடியில்வருஞ் சிலவரிகளுக்கு இடந்தருவீர்களென்று நம்புகிறேன்.

ஔவையாருளிய மூதுரையில், குலத்தளவேயாகுங்குணம், என்பதற்கு, சிலர் பிறந்த குலத்தளவேயாகுங் குணமென்றும், சிலர் பழக்க குலத்தளவேயாகுங் குணமென்றும், வாதாடுகிறார்களென்று கேள்விப்படுகிறேனானதால் அதற்கு சமாதானஞ்சொல்வது உசிதமமென்றுநினைக்கிறேன்.

குலம்-என்பது கூட்டம். அது பிறந்தகுலமென்றும், பழக்ககுலமென்றும் ஆம்.

குணம்-என்பது அறிவு. அது இயற்கைகுணமெனறும், செயற்கைகுணமென்றும்ஆம்

இவைகளுக்குத்திருஷ்டாந்தம்,

திருக்குறள்.

"நிலத்திற்கிடந்தமைகால்காட்டுங்காட்டும்
குலத்திற்பிறந்தார்வாய்ச்சொல்."

இதனபொருள். நிலத்தினியல்பை அதனிடத்தே முளைத்தமுளையானது காட்டும், நற்குலத்திற்பிறந்தவர்சொல் அக்குலத்தினியல்பைக்காட்டும்; எனறும்,

"நிலத்தியல்பானீர்திரிந்தற்றாகுமாந்தர்க்
கினத்தியல்பதாகுமறிவு."

இ-ள். நிலத்தினியல்பினாலே நீர்திரிந்தாற்போலும் அவரவர்சேர்ந்த இனத்தினாலே அறிவுதிரியும்; என்றும்,

வெற்றிவேற்கை,

நாற்பாற்குலத்தின்மேற்பாலொருவன்,
கற்றிலனாயிற்கீழிருப்பவனே.
எக்குடிபிறப்பினும்யாவரோயாயினும்,
அக்குடிகற்றோரைமேல்வருகென்பார்.

என்றும் மேலானகுலத்திற் பிறந்தவர்களிற்சிலர், கீழானகுலத்தோர் பழக்கத்தால் அங்கியபதார்த்தமுதலியது புசிப்பதும், கீழானகுலத்திற் பிறந்தவர்களிற்சிலர் மேலானகுலத்தார்போல்பழமுதலானவைகளைபுசித்திருப்பதும், ஒருதாய்தகப்பனுக்குநான்குபிள்ளைகள் பிறந்தால் அதிலொருவன் மெய்ஞ் ஞானநூலுணர்ந்து விவேகியாவதும், ஒருவன் அஞ்ஞானநூலுணர்ந்து அவிவேகியாவதும், ஒருவன்பழிபாவங்களுக்கஞ்சிநியாயமார்க்கத்தில்பொருள்சம்பாதித்துப் புகழடைவதும்,ஒருவன் பழிபாவங்களுக்கஞ்சாமல்அநியாயமார்க்கத்தில்பொருள்சம்பாதித்துப்பழிப்படைவதும்,இப்படி ஒருவர்மற்றொருவர்க்குஇல்லாமலிருப்பதும், உலகப்பிரசித்தமாயிருப்பதாலும், சிரேஷ்டம்பொருந்திய ஔவையார்பிறந்த குலமென்றாவது பழகியகுலமென்றாவது சொன்னால்நிலைக்காதென்கிற கருத்துகொண்டே மேற்கண்ட குறிப்புமொழிகளைக் கொடுக்காமல்பொதுவாக குலமென்று அருள்செய்திருக்கலாம். ஆனதால் ஒருகக்ஷியே நிலையுறாது இருகக்ஷியும் நிலையுற்றும்,அவர்கள்சமாதானமாவார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்
அறிவோர்க்கன்பன்
ஆ ஐயாசாமிமுதலி.

## மதுரைதேவஸ்தானம்.

ம-ா-ா-ஸ்ரீ தத்துவபோதினியின்கர்த்தரவர்கட்கநந்தவந்தனம்.

ஐயா.

மன்னுலகிருளைநீக்கு மார்த்தாண்டனைப்போன்ற மாந்தர்மனவிருளைநீக்கும், தங்கள் பத்திரிகையில் மதுரைநாட்டின் தேவஸ்தானவரலாற்றில் சிலதை விளங்கச்செய்ய விருப்பமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அதாவது பாண்டியஇராஜாக்கள் பெரும்பாலும்,சிவபக்திக்காரர்.சிவஸ்தலத்தைமுக்கியப்படுத்தும்பொருட்டு மதுரை ஸ்தலபுராணமாகியதிருவிளையாடற்புராணமெழுதினதாக விளங்குகிறது.

சமணமதமாகிய புத்தமார்க்கம் சிலகாலமாகவிருந்து பின்புசிதறிப்போயிற்று.

இந்தநாட்டில் சிவபக்தியே முக்கியமாயிருக்கிறது. இந்ததென்திசையை நரகலோகத்துக்குச் சமமாய் மதிக்கப்பட்ட படியால் பூர்வீகத்தில் பிராமணாள் தென்புலமாகியஇவ்விடங்களுக்குவந்ததில்லை. ஆகிலும், இராஜாக்கள் முதலியவர்கள், வடக்கேயிருந்து இவர்களை வரவழைத்து, கோயில்களில் பூஜைநைவேத்தியம்நடப்பிக்கவும், வாழ்வுசாவுகளில் மந்திரமோதவும் புரோகிதர்களாக நியமித்து, சருவமானியம்விட்டு, தெய்வம்போல்க் கொண்டாடினார்கள்.

இந்தகுருக்கள்வருகிறபோது வடமொழியாகிய சமஸ்கிருதத்திலிருந்தவேதாந்தமும் சாஸ்திரங்களுங் கொண்டுவந்தார்கள்.

இருக்கு, யஜுர், சாமம்,அதர்வணமாகிய நாலுவேதங்களில் விக்கிரகங்களை வணங்கும்படி கொஞ்சமாகிலும் சொல்லப்படாதிருந்தும், சனங்களுடையநிறைந்த அறிவீனத்தைக்கண்டு விக்கிரகாராதனையைநீக்கி விடச்சொல்லாமல், தங்களுடையபிழைப்புக்காகவே அதை நிலைவரப்படுத்தினார்களென்பதிற் சந்தேகமில்லை.

இந்தகபடபிராமணாள் மகாயுக்தியுள்ளவர்கள். பேதைஜனங்களுக்கு நாலுவேதங்களில் அடங்கியதின்னதென்றுசுத்தமாய்த்தெரியாதிருந்தும், இவர்கள் அதைச் சொல்லிக்கொடுக்கிறதுமில்லை,அதன் உண்மையுந்தெரிவிக்கிறதில்லை. கட்டுக்கதைகளாகிய புராணகாவியங்களைப்போதித்து அவர்களை அடிமைகளாக்கி அஞ்ஞானத்தில் அழுந்தச்செய்துவிட்டுஅவர்கள்பொருளை அபகரித்துக்கொண்டார்கள்,இன்னும்கொள்ளுகிறார்கள்.

சிலவேதாந்தநூல்களும் இருந்தாலும்,அசுத்தமும் அபாண்டமும் நிறைந்த அளவிற

ந்தகதைகளையும் புராணங்களையும் படிப்பதினாலும் கேட்பதினாலும் ஆண்களும்பெண்களும் தீயொழுக்கத்தில்நடக்க ஏதுவாகின்றது.

அநேகம்பேர் உலக்கைதேய்ந்து உளிப்பிடியானாற்போல் சாமாக்னியினாலே வெந்து தணிந்து அவமார்க்கராகிறார்கள்.

இதெல்லாங்கண்டாலும், குருக்களென்கிறபிராமணாளுக்கு எவ்வளவும்விசாரமுங்கவலையுமில்லை. பொருள்வந்தால்போதும்.

தேவரெப்படியோஅப்படியே சேஷருமிருப்பார்களென்பதற்கு இத்தேச இந்துக்களே நிதர்சனமாக விருக்கிறார்கள்.

மதுரை, த்திருபூர், அழகர்மலை. திருச்சுழிமானாமதுரைஎன்கிறஸ்தலங்களில் வைஷ்ணவகோவிலும் சைவஸ்தலங்களில் மதுரைமீனாக்ஷிகோயில், திருப்பரங்குன்றம், திருபழுவனம், திருவாரூர், திருவேடகம், பழணி, இராமேஸ்வரம் என்பவைகளே.

மதுரையில்நடக்கும், சித்திரைதிருவிழாவிற்கு சுமார் - ௫0000 - சனம் தென்னிந்தியாவில் பலவிடங்களிருலிந்துவந்து கூடி மீனாக்ஷிக்கும், சொக்கலிங்கனுக்கும் நடக்குங்கல்யாணம், இரதவுச்சவம், என்பவைகளையும் அந்தமீனாக்ஷியம்மன் சகோதரனாகிய விஷ்ணு அழகர்மலையிலிருந்து சீதனங்கொடுக்க வைகைமட்டும், மகாவேடிக்கையுடனெ வருவதையும் பார்ப்பார்கள்.

உ-வது. அநேகம்பேர் படையிலேபட்ட மனிதரையும் தீய்ப்பாய்ந்தவர்களையும் மிகவும் வணங்குகிறார்கள். இவர்களாரென்றால் மதுரைவீரன், சாத்தவராயன், கருப்பண்ணன், முனியாண்டி, மாடன், கூடன், இருளன், இடும்பன், சிலைக்கரும்பி, செத்தி, இராக்கி, பிடாரி, காளி, மாரி, குரளி, சவுண்டி, சவுந்தலை, வாழ்விக்தான், சக்கமாதேவி, முதலானவர்களுக்குபயந்துக்கையெடுக்கிகுறார்கள்.

இவ்விதமாய்மாண்டவர்கள் பெயரைத்தங்களுக்கும் தங்கள்பிள்ளைகளுக்கும் வைத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் கோபத்தையாற்ற சாவலறுத்து ஆடுகளைவெட்டுவதுமன்றி, பன்றிகளையும், எருமைக்கடாக்களையும் பலிகொடுக்கிறார்கள். இதுஎவ்வளவுபரிதாபம்.

தங்களுக்குஇன்னதைட்பிச்சைகொடுப்பார்களென்று சுத்தமாயறிய திராணியில்லாத பித்தலாட்டமுள்ள அனேகக்குறிக்காரர்களையும், கோணங்கிகளையும், நம்பி வெகுசனங்கள்மோசம்போவதை என்னென்று வர்ணிக்கலாம்.

இந்தப்படி இந்துக்கள் பரப்பிரும்மத்தை விட்டு பஞ்சபூதங்களைப் பலதேவர்களாகவும், போரில்மாண்ட மனிதர்களை பல தெய்வங்களாகவும், நம்பிபலனிழப்பதற்கு காரணம் பணத்தின்மீதே திருஷ்டிவைத்த கபடபிராமணாள் பழைமையாகியவேதங்களில் சொல்லியிருக்கும், பரப்பிரும்மதியானத்தைப் பகிரங்கமாய் பலருக்குமறிவித்து பயன்பெறச்செய்யாமற் போனதேயாம்.”

ஆனதால் இனியாவதேழைகளுக்கு செல்வமுள்ளோர், அன்னமளிப்பதும் கல்வியுள்ளோர், அறிவளிப்பதும், முக்கிய தருமமாகக்கொள்வாரொன்றுகடவுளை பிரார்த்திக்கின்றேன்.

தேரிசைவெண்பா.

செல்வமுள்ளோர்கள் சீவர்க்கமுதளித்தல்,
கல்வியுள்ளோரறிவுகற்பித்தல் நல்லதென்,
றித்தலததில்யார்கு மினிதாயுரைக்குமே,
தத்துவபோதினித்தான்.

| | |
|---|---|
| ௧௮௬௬௵ மே௴ ௰௯உ பெங்களூர். | இங்ஙனம் தங்கள்விதேயன் சங்கதியறிவிப்போன். |

## மிஸ்மேரிகார்பெண்டர்.

இமமாட்சிமைபொருந்திய சீமாட்டியைப்பற்றி இந்த பத்திரிகையில் சற்றுவிசேஷமாய் எழுதுகிறதாகச்சொல்லியிருந்தோமல்லவா? அவளைப்பற்றி நாம் எழுதக்கருதிய விஷயங்களையாவும், தெளிவாய்பங்காளசுவதேசபத்திரிகையாகிய “பிலாடேரிவ்யூ” என்பதில் பிரசுரப்படுத்தியிருக்கிறபடியால் அதனையே யிங்குதமிழ்ப்படுத்திபதிக்கநிச்சயித்தோம்.

இம்மாது டாக்டர் - லாண்ட் - சார்பெண்டருடைய அருமைப்பெண். ஏகேசுவரமதத்தைச்சேர்ந்தவள். சிறுபிராயத்திலேயேதன் தகப்பனிடத்தில் பலகல்வியுங்கற்றனள். லாடின், கிரீக், பிரான்சு, இடாலியின், பாஷைகளையும், பரிசிரமப்பட்டு அறிந்ததுமன்றி “கற்க கசடற கற்றவைகற்றபின்நிற்க வதற்குத்தக,, என்றபடி கற்றவாறே சகலநற்குணநற்செய்கைகளும், பூண்டு அழகிய கருணையும் பெருமையுங்கொண்டு லோகோபகாரியாய் வர்த்திக்கவும் தொடங்கினள். இப்பெருமாட்டிசிலசமயங்களில் பாடசாலையுபாத்தியராகி யிருந்த தன்தந்தைக்குஉதவிசெய்துவந்ததுமல்லாமல் தானேயொருபாலிகாபாடசாலையையேற்படுத்தி ௧௮௬௦ஆம் ஆண்டு

வளாயில் மேல் விசாரணை செய்துகொண்டு வந்தாள். மேலும் "ஸண்டேஸ்கூல்" (ஆதித்தியவாரபடசாலை) ஒன்று நியமித்து அதில் சிறுவர்கள் கைத்தொழில்வித்தை பயிலும்படிச்செய்தனள். ௧௮௮௫ ஆம் வருஷம் பிரஸ்டல் என்னும் நகரத்திற்குவந்தபோது, இரண்டுபேர்போனமனிதர்களைக்கண்டதால் உலகநன்மையிலும், சத்தியத்திலும், சரிப்பதாலுண்டாகும் சுகமேநித்தியமும், அசதிருசமானதென்று மென்மேலும்மனதில்உறுதியாகஊர்சிதப்படுத்தினாள். அவ்விரண்டுகீர்த்திமான்களில், ராஜாராம்மோஹனராய் என்பவர்ஒருவர் இவளையச்சீமாட்டி இவ்வுலகத்திலுள்ளசிறந்தமனிதரில் ஒருவரென்று இவளைப்போல் ஒருவளையும்கண்டதில்லையென்றும்புகழ்ந்தவளாய்அக்குணச்சிறப்பின்பொருட்டுஅவளைச்சிநேகித்து அனபுடன் அவர்இறக்குமளவும்இங்கிலாண்டில்கூடவசித்துகாலம்கழித்ததாகவும்தெரியவருகின்றது. இவள்கண்டமற்றொரு கீர்த்திமான் அமரிக்காவின் ஜோஸப்துக்கர்மான், என்பவர். இவர் ஏழைகளுக்கு படிப்பையளிப்பதில் மிகவும் ஊக்கமுள்ளவராயிருந்தார். அமரிக்காயூனைடெட்ஸ்டேட்ஸ் என்னும நாட்டிலுள்ள பஸ்டன்என்னும்நகரத்தில் "மினிஸ்டிரி அட்லார்சுஎன்னும்உத்தியோகத்தைஸ்தாபித்து நடத்தினவர். இவளைப்பற்றி மிஸ்கார்பெண்டரும் ஒருசரிதையை எழுதியிருக்கிறாள். மேற சொன்ன விரண்டுமஹானகளுடைய தர்சனமும், நன்னடத்தையுமேஇவளதுபிற்காலநடவடிக்கையை பெரும்பாலும் சீர்படுத்தஹேதுவானதென்பதற்குச்சந்தேகமில்லை. இவள டாக்டர், ஜோசப் டுக்கர்மான் என்பவரைப்போல் பிரஸ்டலில் ஒருஆசாரியபீடம்ஏற்படுத்தி வுதவியில்லாஏழைகள்வீட்டுக்கெல்லாம்சென்றுஅவர்களின்க்ஷேமலாபங்களைவிசாரித்துக்காத்து அறிவூட்டிக்கொண் டிருந்தனள். (தொடர்ச்சி.

## ஈவினிங்க்ஸ்டார் (மாலைதாரகை)

ஈவினிங்ஸ்டார் என்னும் பேர்கொண்டகப்பலானது அமரிகாவில் நியூஆர்லியன்ஸ்என்னும் பட்டணத்திலிருந்து புறப்பட்டுவருகையில், முதலிரண்டுமூன்றுநாள் வரையில் மழையாவது காற்றாவதின்றி சந்தோஷகரமாகப்பிரயாணம் நடந்திருந்தும், பிறகுபெரியபுயல்வீசினபடியால் ஜலம்கப்பலுக்குள் நாற்புறத்தினின்றும்வந்து விழவும், மேகங்கள்சூழ்ந்து இருண்டுபயமுறுத்தவும் கப்பல் அல்லகல்லோலப்படவும் சம்பவித்தது. கேப்டனும், இன்ஜினீரும், கப்பலைக்காக்கும்படி தம்மாற்கூடியமுயற்சிகள்செய்தும்பயன்படவில்லை. ஸ்திரீகளும், இரவெல்லாம், ஜலம்வெளியில் எடுத்துக்கொட்டுவதில் அதிகப்பிரயாசப்பட்டார்கள். ஒன்றும்பயனபடாமல்போயிற்று. இஃது இரவு மூனறுமணிக்குமும்மரித்தபடியால் அதிலிருந்த இருநூறுபேரும் தமதுகோரிக்கையை விட்டவராய், பிள்ளையைத்தாயும் கணவனைமனைவியும், அன்பரையன்பரும் கட்டிக்கொண்டு கூக்குரலிட்டு அழவும், சிலர்மதிமயங்கி விழவும, சிலர்பைத்தியககாரர்களைப்போல இன்னது செய்யவேண்டுமெனறு தெரியாமல ஆடைகளைந்தெறிந்துமயிரைப்பிச்சிக்கொண்டு திரியவும், சிலர்முன்னதாகவே சமுத்திரத்தில் குதித்துச்சாவதுநன்றென்றுநினைத்து ஓடி சமுத்தரத்தில்பாயவும், தொடங்கினர். அய்யோ அந்த அநியாயமான பரிதாபத்தை என்னென்று சொல்வேன். காலையாறுமணிக்கெல்லாம், அக்கப்பல் அத்தனையுயிர்களுடன் சமுத்தரத்தனடியிற் சென்றுவிட்டது. தமதுபிராணத்தைக்காப்பாற்றிகொள்ள கொம்புகளையும், மீந்திருந்தஇரண்டுமூன்று சிறுபடவுகளையும் பிடிததுத்தொங்கக்கொண்டிருந்த ௨௦ - பேருள் கடற்புரட்சிகளால் தமது பிடியைவிட்டுமுழுகிப்போனவர்கள்போக முடிவில் தேர்நதவர்கள் ௫ பேர் - இவர் ஒருசிறுபடகில்ஏறியபின்பு அப்படகை நடத்ததுடுப்புமில்லை. தினிக்குமொன்றுமில்லை - நன்னீருமில்லை - இந்த ஸ்திதியில் காற்றின்சகாயத்தால் கொஞ்சம்தூரம் போனதே மற்றொருவன் ஒருதுடுப்பைவைத்துக்கொண்டு கடலில்தத்தளித்துக்கொண்டிருக்கக்கண்டு அவனையும் ஏற்றிக்கொண்டு படகை நடத்திக்கொண்டு போயினர். பூமியோஇன்னும் ௧௮௬ மயில்தூரத்திலிருக்கிறது. வெயிலாலும், உணவில்லாமையாலும், இளைப்பாலும், இரண்டுபேர அதிலேயே இறந்துபோயினர். இவரையும்வைத்துக்கொண்டுகொஞ்சம்தூரம் போனபின்புஇங்கிலாண்டுக்கு சம்பந்தப்பட்ட ஒருகப்பலைக்கண்டுஉளமகிழ்ந்து கிட்டப்போனவுடனே அவர்கள் அன்புடன்கொண்டு உபசரித்து வேண்டியவுதவிசெய்தனர்.

(டயம்ஸ்பத்திரிகை.)

## இங்கிலீஷ் தத்துவபோதினி.

மன்னுலகேற்றும் சென்னைமாநகரம்,
தன்னிலுதித்தெழும் தத்துவபோதினியின்,
பரம்பொருள்யாக்கும் பகர்ந்திடுவள்ளலாய்,

இரும்புவனத்துப் பெரும்பலநன்மை
செய்,
பத்திராதிபர்க்குப் பணிவுடன்வந்தன
ம்.
நித்தமீவனென்-நிருபமங்கீகரித்,
தச்சிட்டாங்கே-யதனைப்பயன்படுத்,
திச்சகத்தோரெலாம்இன்புறவருளவே.

அய்யா ?

தாங்கள்இப்போது தத்துவபோதினி யென்னும்பத்திரிகையைத்தமிழிலும் தெலுங்கிலும் மாத்திரம் பிரசுரம்செய்துவருகின்றீர்களேயன்றி இங்கிலீஷிலும் ஒன்று அச்சிட்டு தேசபாஷையில் விசேஷபரிசயமும், விருப்புமில்லாதசிலருக்கு உபகரிக்காமல் அநாதரணையாய் விட்டுவிட்டீர்களன்றோ? ஆகையால்இனிஇங்கிலீஷிலும்முக்கியமானசிலவிஷயங்களைப் பற்றியாவதுநான்குபக்கத்துக்குக்குறைபடாமல்அச்சிட்டுஃஷி இரண்டுபத்திரிகைகளுடன்இணைத்துப் பிரகடனம்செய்வீர்களாகில்மிகவும்உபயோகமாயிருக்கும். அதற்காக சந்தாதாரர்கள் பிரகிருதத்திலுள்ள சந்தாவுடன் எட்டணாஅதிகமாக அனுப்புமபடி செய்யும்பக்ஷத்தில் பிடிக்கும் செலவுகளுக் கனுகூலமாகுமென்று நினைக்கிறேன். இவ்விஷயத்தில் உங்களபிப்பிராயத்தைத்தெரியப்படுத்துவதுமன்றிஎவ்வகையினும் இங்கிலீஷ்ஜெர்னலொன்றையச்சிட யோசனைசெய்து என்வேண்டுகையையும், எனைப்போன்ற சோதரரின்ஆவலையும் அறிந்து உபகரிப்பீர்களென்று மிகவும் பிரார்த்திக்கிறேன்.

வெண்பா.

சோதிற்பரம்பொருளைக் குவலயத்தோர்
தாமறியப்,
போதிக்குமோதத்துவபோதினியே - வா
தின்றி,
யான்வேண்டுமித்துணையையார்க்கும் நல
மளிக்கத்,
தான்வேண்டுமாயின்தராய்.

இங்ஙனம்
அன்புள்ளசோதரன்
சத்தியகாமி.

---

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுவுருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

---

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் ,பதிப்பிக்கப்பட்டது.